குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 48] விபவ ஆண்டு தைத்திங்கள் 10—2—89 [இதழ் 3

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்
தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்று
திருக்குவளை என்னும் திருக்கோளிலிக்கு வருகை தந்தபோது



அவர் பிறந்த இல்லமாகிய அஞ்சுகம் முத்துவேலர் நூலகத்தில்
தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் சார்பில்
ஸ்ரீ மத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்
முதல்வருக்கு ஆசிக் கவசமாகப் பொன்னுடை போர்த்தித்
திருவருட்பிரசாதம் வழங்கிய காட்சி
29—1—1989

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

சிவசத்தி யைத்திளைப்பர்
சீவன்முத்த ரென்று
மவசத்த மாபா
தகமென் — சிவசத்தி
தன்னைப் புணர்ந்ததன்று
சாற்றுவமை யுந்தெரியா
தன்னைமுலைப் பாலென் றறி.

— முத்திநிச்சயம் 17

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்
முதலியார்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 48 | 10-2-89 | இதழ் 3

உட்பொருள்

எண்		பக்கம்
1	கலைஞர் ஆட்சி கருணையுடன் பொலிக	113
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	118
3	போதமும் சித்தியும் ...	124
4	குருமூர்த்த ஆலயங்களின் குடமுழுக்குப் பெருவிழா	127
5	பொறியியலும் ஆன்மீகமும் ...	129
6	திருமூலரின் பொருளாதாரச் சமத்துவச் சிந்தனைகள் ...	134
7	குமரகுருபரர் பிரபந்தங்களில் பசு ...	137
8	மேலை நாட்டுத் தத்துவ மேதைகள் ...	142
9	கழறிற்றறிவார் ...	148
10	செய்திகள் ...	152
11	எதிர்காலம் ...	156
12	Gnanasambandam Magazine ...	160
13	பார்வையாளர் குறிப்பு நகல்கள்	136, 147
14	இதழ்வழிச் சைவசமயக் கல்வி V. பாடம்-1. ...	161

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 48 ★ இதழ் 3

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

விபவ தை 10—2—1989

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்

கலைஞர் ஆட்சி கருணையுடன் பொலிக

ஒருபிரார்த்தனை :

"வான்முகில் வழாது பெய்க; மலிவளம் சுரக்க; மன்னன் கோல் முறை அரசு செய்க; குறைவிலாது உயிர்கள் வாழ்க" என்று வழிபட்டு வாழ்த்துவது சைவ மரபு. நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலின் முதல்நாளன்றும் (20—1—89) தேர்தல் நாளன்றும் (21—1—89) தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தருமை ஆதீனத் திருக் கோயில்களில் கீழ்க்கண்டவாறு கூட்டுப்பிரார்த்தனை நிகழ்த்தத் திருவுளம் கொண்டார்கள். நாள்தோறும் ஆதீனத் திருமடத்தில் மாகேசுவரபூஜை நேரத்தில் நிகழ்த்தப்படும் பிரார்த்தனை வாசகங்களே சிறிது மாற்றம் செய்து வழங்கப்பெற்றன. வழிபாடு நிகழ்த்தி ஒருவர் படிக்க ஏனையோர் ஒருங்கிணைந்து வழிமொழிந்து கூட்டுப்பிரார்த்தனை நிகழ்த்தினர். இவ்வாறு இருநாளும் 108 முறை பிரார்த்திக்கப்பெற்றன.

பிரார்த்தனை வாசகம் :

" தேசத்தில் உள்ள இடையூறுகள் நீங்கி, சுபிட்சம் நிலவவும், திருக்கோயில்களில் நித்திய, நைமித்திக பூஜைகள் குறைவின்றி நிறைவாக நடைபெறவும், திருப்பணி, மகோத்சவங்கள் முட்டின்றி நிகழவும், நாட்டு மக்கள் பசியும், பிணியும் நீங்கி, வசியும் வளனும் சுரந்து வாழவும், நாட்டுமக்களுக்கு நல்லுணர்வும், நற்செயலும், நல்உழைப்பும் பெருகி வாழ்வு சிறக்கவும், நல்ல செயலாற்றும் திறனுடைய தொண்டர்கள், தலைவர்கள் நாட்டில் பெருகவும், நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் உள்ள சமுதாயத் தலைவர்களும், தொண்டர்களும் நாட்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தவும், அத்தகைய நல்லோர்களுக்குச் சிவஞானமும், தீர்க்காயுளும் பெருகவும், நாட்டில் உள்ள மக்கள் எல்லோரும், நல்லறச் சிந்தனையுடன், நற்செயல்புரிந்து நலமேவாழ்ந்து சிறந்திடவும், ஏற்றவகையில், இந்நாட்டுஆட்சியை மலரச் செய்து அருள்புரிய வேணுமாய்ப் பிரார்த்திக்கிறோம். "

பாராட்டும் வாழ்த்தும் :

தேர்தல்முடிவுகள் வெளியாயின. குழப்பமில்லாததெளிவான, அறுதிப்பெரும்பான்மையோடு கூடிய ஆட்சி மலர இறையருள் துணையாயிற்று. கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மலர்ந்தது. மக்கள் பிரார்த்தனையின் பயனாக, இறையருளால் புதிய அரசு ஆட்சிக்கு வந்துள்ளதாகவே ஞானசம்பந்தம் கருதுகின்றது. இறையருளால் அமையும் எந்த ஒரு மாற்றமும் ஏதேனும் ஒரு நன்மை குறித்தே அமையும். தெளிவான தீர்ப்பு வழங்கிய தமிழக வாக்காளர்களை ஞானசம்பந்தம் பாராட்டுகின்றது. மக்கள் தீர்ப்பு, மகேசன் தீர்ப்பே என உளங்கொண்டு, தமிழக முதல்வர். கலைஞர். திரு. மு. கருணாநிதி அவர்களுக்கும், ஏனைய அமைச்சர்கள், உறுப்பினர்கட்கும் ஞானசம்பந்தம் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறது.

புதிய கலைஞர் :

'நமது பிரார்த்தனையின் பலனாகவா கலைஞர் ஆட்சி அமைந்தது?' என்று சிலர் வினவலாம். லட்சோபலட்சம் மக்களின் பிரார்த்தனை வீண்போகாது. 'பழைய கலைஞர்தானே' எனச் சிலர் ஐயுறவு கொள்ளலாம். ஐயுறத் தேவை இல்லை என்றே முதல்வர்

பொறுப்பேற்றுள்ள கலைஞரின் தொடக்க கால நடைமுறைகள் நம்பிக்கை தருகின்றன. ஆட்சி ஏற்றவுடனேயே, அன்று அறிஞர் அண்ணுதுரையார் கூறியதுபோல் 'திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களித்தவர்களுக்கும், வாக்களிக்காதவர்களுக்கும், ஏற்றத்தாழ்வின்றி - பாரபட்சமின்றி - கழகமும் நானும் தொண்டாற்றுவோம்' என்று விடுத்த அறிக்கையிலேயே ஒருபுதியகலைஞர் காணப்படுகிறர். எடுத்த எடுப்பிலேயே கட்சிக்காரர்களை நெறிமுறைப்படுத்தி வைத்திருக்கும் திறன்; வயதிற்கும் பதின்மூன்றுண்டுகள் இடைப்பட்ட அனுபவத்திற்கும் ஏற்ற நிதானமான-உணர்ச்சி வயப்படாத பேச்சு; ஆத்திரமூட்டப்பட்ட போதும், பதட்டமின்றி எதிர்க்கட்சியினரையும் அரவணைத்துச் செல்லும் பாங்கு, பழம்பகை பாராட்டாது எம். ஜி. ஆர். சமாதியிலும் மலர் வளையம் வைத்து உயர்ந்த பண்பு முதலியவற்ருல் கலைஞரின் புதுமைப் பாணி பொலிவுற்றுத் திகழ்கிறது. வருகைக்கு பிரார்த்தனைப் பயன் பிரகாசமாகத் தெரிகிறது.

ஆற்றலும் அறமும் :

பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் தமிழகத்தின் முதல்வர் பொறுப்பேற்றுள்ளார் கலைஞர். முதல்வர்பொறுப்புக்கு முற்றிலும் தகுதியானவர் அவர் என்பதில் இரண்டு கருத்துக்கு இடமேஇல்லை. இதுவரைவந்த தமிழ்நாட்டுமுதலமைச்சர்களிலும் இந்தியப் பிறமாநில முதலமைச்சர்களிலும் கலைஞருக்குத் தனிச் சிறப்பு உண்டு. அனுபவமும், செயல்திறனும், பிரச்சனைகளை உடனுக்குடன் புரிந்து கொண்டு முடிபெடுக்கும் ஆற்றலும் உடையவர். ஆற்றலோடு அறநெறிப்பண்புகளும் பெருகி இணைந்து விடுமானல் அது அளவிட முடியாத பலமாக - நாட்டின் வளமாக உருவாகிவிடும்.

> " அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை; அதனை
> மறத்தலின் ஊங்கில்லைக் கேடு. ''

என்பது வள்ளுவம். வள்ளுவருக்குக் கோட்டம் எடுத்து, குறளுக்கு விளக்கமாகக் 'குறளோவியம்' கண்ட கலைஞர், வள்ளுவர் வகுத்த அறநெறிப்பண்புகளைப் பெரிதும் ஆட்சியில்கொண்டு செலுத்துவாரானல் அது பொன்மலர்க்கு மணமும் கூடினற் போல் பொலிவுற்றுத்திகழும்.

தவறும் திருத்தமும் :

கலைஞர் மீதும் அவர் திறமைகள் மீதும் பற்று ஒரு புறம், பழைய தவறுகள் தலை எடுக்குமோ என்ற அச்சம் ஒரு புறம்

நம்மவர்களுக்கு இருந்தது மீண்டும் கலைஞர் வருகைக்கு வழி வகுத்த திருவருள் அச்சம் தேவையில்லை என்றே குறித்துக்காட்டு கிறது. 'கலைஞர் அறநிலையங்களுக்கும், சமய நம்பிக்கையுடை யார்க்கும் எதிராகச் செயற்படுவார்' என்பது ஒரு குற்றச்சாட்டு. தமது அமைச்சரவையில், பக்தரும் பண்பாளருமான தினகரன். திரு. கே. பி. கந்தசாமி அவர்களை அறநிலையத்துறை அமைச்சராக நியமித்திருப்பதே குற்றச்சாட்டுத் தேவையற்றது என்பதை எடுத்துக்காட்டுகிறது. 'கலைஞர் பிரிவினைவாதி' என்பது இன்னொரு குற்றச்சாட்டு. தேசியமுன்னணியில் சிறப்பான அங்கம் வகிப்பதன் வாயிலாக அதனையும் அவர்பொய்யாக்கியுள்ளார். தவறுகளைத் திருத்திக்கொண்டு முன்னேறத் திருவருள் தந்த வாய்ப்பு இது என்றே தோன்றுகிறது. இதனை முறையாக உணர்ந்தே கலைஞர் செயற்படுகிறார் என்பதும் எல்லோருக்கும் மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியாகும்.

எதிர்பார்ப்பு :

கலைஞரிடம் நாடு பலவற்றை எதிர்பார்க்கிறது. தலையாயது ஒன்று அவர் ஆட்சிக் காலத்தில் காலாவதி ஆகிய காவிரி ஒப்பந் தம். அவர் அதில் பொறுப்பாகச் செயற்படவில்லை என்பது பலரது குற்றச்சாட்டு. பின் வந்த ஆட்சியாளர்களும் நியாயமான ஒரு ஒப்பந்தத்தைக் காணாது காலந்தாழ்த்தினர். பழம்பழி துடைத்துக் கொள்ள மீண்டும் திருவருள், வாய்ப்பினை வழங்கியுள்ளது. நடுவர் மன்றத்திற்குப் போகாது பேச்சு வார்த்தைகள் மூலமே நல்ல ஒரு முடிபு காணலாம் என்ற கலைஞர் அணுகு முறையைக் கர்நாடக முதல்வரும் ஆளுநரும் பாராட்டி வரவேற்றுள்ளனர். தேசிய முன்னணியில் கர்நாடக முதல்வரும் அங்கம்வகிக்கிறார். உடனடி யான பேச்சு வார்த்தைகள் மூலம் காவிரிப்பிரச்சனைக்கு நல்ல ஒரு தீர்வை இருவரும் கண்டு விட்டால், பழம் பழி நீங்குவதோடு, இவர்பிறந்த தஞ்சைத்தரணிக்கும், தமிழகத்திற்கும் இவர் செய்த ஒரு மாபெரும் தொண்டாகக் கருதிப் போற்றிப் பாராட்டப் பெறும். செயல் திறம்மிக்க-இராஜதந்திரம் மிக்க கலைஞர் இதனைச் செய்து வெற்றி காண்பார் என்றே ஞானசம்பந்தம் நம்புகின்றது.

கட்சியும் ஆட்சியும் :

கட்சிவேறு; ஆட்சிவேறு என்றதெளிவை கலைஞர் நன்கு உணர்ந்திருக்கிறார். ஆட்சி சிறந்தால் கட்சி தானே சிறக்கும், ஆட்சிப் பணிக்கு முதலிடம், கட்சிப்பணிக்கு இரண்டாம் இடம் என்பதை அவர் மனங் கொள்வார் என்றே தோன்றுகிறது. தம் கீழ்வாழும் அனைவருக்கும் பாகுபாடின்றி நலஞ்செய்யும் பொறுப்

ஆட்சித்தலைவர்க்கு உரியது. இதனை நன்கு உணர்ந்து தமிழகத்தில் நல்லாட்சிமலர கலைஞரும், அவர் அமைச்சரவை உறுப்பினர்களும் பாடுபடவும், கட்சித் தொண்டர்கள் ஆட்சியில் தலையிடின்றிப்பணி புரிந்து ஆட்சிக்கும் கட்சிக்கும் வலிமை சேர்க்கவும் இறையருள் இவர்களின் நல்லாட்சிக்குத்துணை நிற்கவும் ஞானசம்பந்தம் உளமார இறைவனைப் பிரார்த்திக்கின்றது.

“ பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் ”

என்பது வள்ளுவர் வாய்மொழி.

வாழ்த்து :

கலைஞரின் முன்முறைஆட்சியில் 1381ஆம் பசலிக்குத்தகையை அளந்துவிட்டால் 1380 ஆம் பசலி வரை உள்ள பாக்கிகள் தள்ளுபடி என்று அறிவித்தது ஒரு பெருங்குறை அதன் பாதிப்பு இன்னும் தீர்ந்தபாடில்லை. உழைக்காமல் உயரலாம். படிக்காமல் பாசாகலாம். கடமை, கண்ணியம், கட்டுப்பாடுஇன்றியே காரியம் சாதிக்கலாம் என்ற எண்ணங்கள் நாட்டில் வளரத் தொடங்கின. அத்தகைய குறை மீண்டும் வாராதிருக்க வேண்டுகோள் விடுக்கிறது ஞானசம்பந்தம். எல்லா நன்மைகட்கும் அடிப்படையானது நமது நாட்டு ஆலயங்களும், அறநிலையங்களும் அவை செயல்பட முடியாதுபோனல் அனைத்துச் செயல்களுமே இடர்ப்படும் என்பர்.

“ முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னம் களவு மிகுத்திடும் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே. ”

என்பது திருமந்திரம். இதனை நடைமுறையில் அனுபவித்து வருகிறோம். அடிப்படை சரிப்படுமானல் அதன் மீது எழும்பும் மக்கள் வாழ்க்கையும், ஆட்சியும் வளமுறும். கபினி அணையும், காவிரித் தாயும் கருணைமழைபொழிவாள். வானமும் வரட்சியகல வளமழைபொழியும். பயிர்கள் செழிக்கும் பலன்கள் மிகுந்திடும். இவ்வளமிகுவாழ்வு தமிழ் மக்கட்குக் கிடைப்பது மாண்புமிகு முதல்வர் கலைஞரின் கருத்திலும் கைகளிலுமே இருக்கின்றது. செயல்படுத்த செந்தமிழ்ச் சொக்கர் திருவருள் புரிவாராக.

“ வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித் திருநாடு ”

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரத்தில் திருமஞ்சனவீதியிலுள்ள
ஸ்ரீ சச்சிதானந்த விநாயகர், 15 குருமூர்த்த ஆலயங்கள்
திருக்குடமுழுக்குப் பெருவிழாவில்

வழங்கியருளிய

ஆசியுரை

29—1—89

" சித்திதரு நாதன் தென்கமலை வாழ்நாதன்
பத்தி தருநாதன் பரநாதன் — முத்திப்
பெருநாதன் ஞானப் பிரகாசன் உண்மை
தருநாதன் நம்குருநா தன் " — ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

" சிரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்தி டாமல்
தாரணி அன்பரைஆள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழில் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன் இரு சரணமலர் பரவி வாழ்வாம். "

— ஸ்ரீ சம்பந்த சரணாலயர்.

வில்வாரண்யம் :

இந்தப் பூவுலகில் விளங்குகின்ற புண்ணியத் தலங்கள் பலவற்றுள்ளும் தருமபுரம் சிறந்த ஒன்று. இதற்கு வில்வாரண்யம் என்பது பெயர். வில்வ மரங்கள் நிறைந்திருக்கின்ற காடு என்னும் பொருளை இது தருகிறது. ஆரண்யம் - காடு. இறைவனுக்கு உகந்த அர்ச்சனைப் பொருள்களில் வில்வம் குறிப்பிடத்தக்கது. "வில்வம் அறுகுக்கு ஒவ்வா மென்மலர்கள்" என்பது நீதிநூல். மகாலட்சுமி உறைகின்ற இடங்களில் வில்வமும் ஒன்று. மகாலட்சுமி தங்கு கின்ற இடங்களாக ஐந்தினைக் கூறுவர். இரண்டு தாவரங்கள்,

இரண்டு விலங்கினங்கள்; ஒன்று மனித இனம். வில்வதளத்திலும் தாமரை மலரிலும் மகாலட்சுமி உறைகிருள். இவை தாவரங்கள். யானையின் முன்பகுதியாகிய மத்தகத்திலும், பசுவின் பின் பகுதியிலும் உறைகிருள். இவை விலங்கினங்கள். சுமங்கலிப் பெண்ணின் தலைவகிடு முனையில் உறைகிருள். இவள் மனித இனம். இங்கு மகாலட்சுமி உறைகிருள் என்றவுடன் தனம், தானியம் வரும் என்று மட்டும் எண்ணிவிடக் கூடாது. இவற்றிற்கெல்லாம் மேலாக உள்ள அருட்செல்வத்தையும் அது கொடுக்கும்.

தருமபுரம், மாயூரம், சித்தர்க்காடு :

தருமபுரம் என்னும் பதியின் மேற்கில் மயிலாடுதுறையும், அதன் மேற்கில் சித்தர்க்காடு என்னும் தலமும் அமைந்துள்ளன. சித்தர்காட்டில் திருக்கயிலாய பரம்பரை உபதேச மரபில் வந்த சீகாழிச் சிற்றம்பலநாடிகள், ஞானசித்தராக அனுபூதிமானுகத் திகழ்ந்து அறுபத்துமூன்று அடியவர்கட்கு சாம்பவதீக்கை செய்து ஒரே நேரத்தில் முத்திப்பேறருளியவர். அச்சிற்றம்பலநாடிகளின் குருமூர்த்த ஆலயம் பரிவாரமூர்த்திகளுடன் கூடிய சிவாலயமாகத் திகழ்கிறது. தருமபுரத்திலும் அதே சிற்றம்பலநாடிகளின் ஏழாவது தலைமுறையில் வந்த தருமை ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஞானசித்தராக, அனுபூதிமானுக விளங்கி அனுபூதி ஞானமாகிய மெய்ஞ்ஞானத்தை ஆனந்தபரவசர் முதலிய 25 மகாசந்நிதானங்கட்கும் வழங்கியதோடு பல அடியவர் கட்கும் அருள்பாலித்துள்ளார். அவர் தம் குருமூர்த்த ஆலயமே ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலாக மிளிர்கிறது. இத்தகைய அருளாளர்கள் ஜீவசமாதி கொண்டுள்ள இருதலங்களுக்கும்இடையில் திகழ்வதால் தான் "ஆயிரம் ஆனாலும் மாயூரம் ஆகுமா" என்ற பழமொழியும் மாயூரத்தைப் பற்றி எழுந்திருக்கிறது.

தருமபுரம் என்னும் பெயர் வந்ததற்குக்காரணம், தருமனுகிய எமன் இங்குள்ள இறைவனைப் பூசித்தது மார்க்கண்டேயர் மீது பாசம் வீசிய பாபம் விமோசனம் ஆகும் பொருட்டு. தருமன் இங்கு இலிங்கப் பிரதிட்டை செய்து பூசித்துப் பாபவிடுதலை பெற்றுன். இதனுல் இங்கு எழுந்தருளியுள்ள இறைவனுக்குத் தருமபுரேசுவரர் என்னும் பெயர் அமைந்துள்ளது.

தருமை ஆதீனம் :

வில்வாரண்யமாகிய இந்தப்பதியில், திருவாரூர் கமலை ஞானப் பிரகாசரின் ஆணைவழி குருஞானசம்பந்தர் ஒரு சைவ சமய நிறுவனத்தைக் கி. பி. 16 ஆம் நூற்றுண்டில் தோற்றுவித்தருளினுர்

(கி. பி 1561 இல் என்பது கல்வெட்டு செப்புப் பட்டயக் குறிப்பு) அதிலிருந்துகொண்டு, ஓடிவரும்காரணர்க்கு உண்மைப்பொருளை உபதேசம் செய்து கொண்டிருந்தார். அந்நிறுவனமே இன்று ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோடித் தழைத்து நிற்கும் தருமை ஆதீனமாகும். ஆதீனம் என்றால் உரிமை என்பது பொருள். உண்மைப் பொருளை உபதேசிக்கும் உரிமையுடைய குருநாதர்கள் வழிவழியாக எழுந்தருளியுள்ள இடங்களே ஆதீனங்கள் என்றுயின.

திருக்கயிலை மரபு :

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம், வேளாக் குறிச்சி ஆதீனம், தருமை ஆதீனம் போன்றவை திருக்கயிலாய பரம்பரையில் வந்தவை. இவற்றில் புறச்சந்தானுசாரியர்களில் நான்காவது குருநாதராகிய உமாபதி சிவத்தின் சீடர் சீர்காழி மச்சுச்செட்டியார் என்னும் அருள்நமச்சிவாயர் அவர்வழியில் ஒரு பிரிவில் திருவாவடுதுறை ஆதீனமும், மற்றொருபிரிவில் காஞ்சிபுரம் தொண்டைமண்டலஆதீனம், வேளாக்குறிச்சிஆதீனம், தருமபுரம் ஆதீனம் ஆகியவை தோன்றின.

குருமூர்த்த ஆலயங்கள் :

தருமை ஆதீனத்தின் முதல் குருநாதர் ஸ்ரீ குருஞான சம்பந்தரின் ஆலயம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலாகத் தருமபுரத்தில் உள்ளது. இவ் ஆதீனத்தின் 6, 8, 16, 17, 18 ஆகிய குருமூர்த்திகளின் ஆலயங்கள் வெளியூர்களில் அமைந்துள்ளன. எஞ்சிய 19 மகாசந்நிதானங்களின் ஆலயங்களும் தருமையில் உள்ளன. இவற்றில் 2, 19, 24, 25 ஆகிய குருநாதர்களுடைய ஆலயங்கள் தருமையின் மேற்குத்திசையிலுள்ள ஆனந்த பரவசர் பூங்காவிலும், இவைதவிர உள்ள 15 குருமூர்த்திகளின் ஆலயங்கள் காவிரியின் கரையில் தருமையின் வடக்குத் திசையிலுள்ள திருமஞ்சனவீதியிலும் அமைந்துள்ளன. இந்த 15 குருமூர்த்தங்களின் ஆலயங்களுக்கும், இவற்றின் முகப்பிலுள்ள ஸ்ரீசச்சிதானந்த விநாயகர் திருக்கோயிலுக்கும் இன்று திருக்குடமுழக்குப்பெருவிழா சிறப்புற நிகழ்ந்துள்ளது.

சச்சிதானந்த விநாயகர் :

விநாயகர் திருவுருவமும் அவரின் திருப்பெயர்களும் காரணங்களோடு அமைந்துள்ளன. கஜமுகாசுரனை அழிப்பதற்கு மனிதஉரு, தேவஉரு, விலங்குஉரு ஆகிய மூன்றும் ஒருசேர அமைந்த

திருவுருவத்தோடு விநாயகர் அவதரித்தார். கணங்களின் பதி ஆதலின் கணபதி என்றும் தனக்குமேல் ஒரு நாயகர் இல்லாதவர் ஆதலின் விநாயகர் என்றும் விக்கினங்களை நீக்குபவர் ஆதலின் விக்கினேஸ்வரர் என்றும் ஆனைமுகத்துடன் விளங்குவதால் ஆனைமுகன் என்றும் அவர் போற்றப் பெறுகிறார். இங்குத் திருக்கோயில் கொண்டுள்ளவர் ஸ்ரீ சச்சிதானந்த விநாயகர். சத்து + சித்து + ஆனந்தம் = சச்சிதானந்தம் என்று ஆகும். சத்து - உள்ளது - உண்மை; சித்து - அறிவு; ஆனந்தம் - இன்பம். இம்மூன்றுமாகத்திகழ்ந்து இம்மூன்றையும் உயிர்கட்கு அருளுபவர். இத்திருக்கோயிலைத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் அதிபராக விளங்கிய ஸ்ரீ காசிவாசி சடையப்பத் தம்பிரான் என்பவர் கி. பி. 1816 இல் கட்டினார். இதற்குச் சான்றாக இக்கோயிலின் நிலைக்குமேல் கல்வெட்டு ஒன்று உள்ளது.

குரு – சொல் விளக்கம் :

குருமூர்த்த ஆலயங்கள் என்பவை, குருமூர்த்திகளின் திருமேனி சமாதி செய்யப்பெற்ற புனித இடங்கள். குரு என்னும் சொல், கு+ரு என்று பிரிக்கப் பெறுவது. 'கு' என்றால் பாவம்; அறியாமை. 'ரு' என்றால் நீக்குபவர். தமிழில் ஆசிரியர் என்பதற்கும் இதே பொருள்தான். ஆசு - குற்றம், பாவம், அறியாமை. இரிதல் - போக்குதல். இரியர் என்றால் போக்குபவர் என்பது பொருள். ஆதலின் குரு என்பவர் பாவங்களை, அறியாமையை நீக்குபவர் ஆவார். பாவங்களை நீக்குபவர் எனவே அறிவையும் அதன்வழிப் புண்ணியப்பேற்றையும் தருபவர் என்று பொருளாகிறது. அறியாமையாகிய பாவம் போதல் துன்பநீக்கமும், அறிவுடைமையாகிய புண்ணியப்பேறு வாய்த்தல் இன்ப ஆக்கமுமாகும். அப்பரடிகள் அருளியுள்ள புள்ளிருக்குவேளூர்த் திருத்தாண்டகப்பாடல் ஒன்று இக்குறிப்பைத் தருகிறது.

"பேராயிரம் பரவி வானோர் ஏத்தும்
பெம்மானை பிரிவிலா அடியார்க்கு என்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னை
திரிபுரங்கள் தீஎழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே"

இப்பாடலில் 'தீராநோய் தீர்த்தருள வல்லான்' என்பது துன்ப நீக்கத்தையும், "என்றும் வாராத செல்வம் வருவிப்பானை"

என்பது இன்ப ஆக்கத்தையும் குறிக்கிறது. இத்தகைய நிலையினைக் குருநாதர்களும் அருளுவர் ஆதலின் அவர்கள் 'குரு' என்று அழைக்கப்பெறுகிறார்கள். குருவேறு,சிவம்வேறு என்றுஎண்ணுதல் கூடாது என்பது சைவ சமய மரபு. ''குருவே சிவம் எனக் கூறினன் நந்தி'' என்றார் திருமூலரும்.

தன்னை அறிவித்துத் துன்பம் நீக்கி இன்ப ஆக்கத்திற்கு வழிகாட்டியுள்ள குருநாதர்களையும் அவர்கள் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஆலயங்களையும் நினைந்து போற்றி வழிபடுதல் நம் தலையாய கடனாகும். இக்கடமைதவறின் பிழை என்று பேசும் சிவஞானபோதவெண்பா,

> '' தன்னை அறிவித்துத் தான்தானாச் செய்தானைப்
> பின்னை மறத்தல் பிழை ''

என்பது அவ்வெண்பாத் தொடர்.

> '' நானார் என் உள்ளமார் ஞானங்களார் என்னை யாரறிவார்
> வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல் ''

என்ற மணிவாசகமும் இக்கருத்தே பற்றி எழுந்தது. அத்தகைய குருநாதர்களின் திருமேனி சமாதி கொண்டுள்ள புனித இடங்கள், ஆண்டவன் எழுந்தருளியுள்ள ஆலயங்களாகக் கொண்டு போற்றி, இதுபொழுது அக்குருமூர்த்த ஆலயங்களுக்குக் குடமுழுக்குப் பெருவிழாவும் சிறப்புற நிகழ்ந்துள்ளது.

இரண்டு பாடல்கள் :

இவ்வருள் திருப்பணி திருவருளும் குருவருளும் உடனாய் நின்று நடத்த ஒரு கருவியாக இருக்கும் பெரும்பேறு நமக்குக் கிடைத்திருக்கிறது. "யானே தவமுடையேன் என் நெஞ்சே நன்னெஞ்சம்" என்ற காரைக்காலம்மையாரின் வாக்குப்படி மகிழ்ச்சியடைகிறோம். இவ்வளவு பெரிய ஆதீனத்தை இத்துணை ஆண்டுகள் அருட்பொலிவோடு கட்டிக்காத்து வந்த அருளாளர் களின் அருள்நீழலில் இருந்து, இப்பணியை நிகழ்த்த இறையருளே துணையாக நின்று கூட்டுவித்துள்ளது. இக்கருத்தை இவ்வாதீன ஆதி குருமுதல்வர் நமக்கும் கற்றுக் கொடுத்துள்ளார். அவர் அருளிய இரண்டு பாடல்கள் ஈண்டு எண்ணிப் போற்றுந்தகையன.

எந்தச் செயலைச் செய்தாலும் எந்தச் செயலைப் பற்றிப் பேசினாலும் எந்தச் செயலைச் சிந்தித்தாலும் இறைவன் காட்டு கின்ற அருளையே கண்ணாகப் பற்றிக் கொண்டு, அதனை விட்டு நீங்காது அதன் வழியே நடக்கக் கற்றுக் கொள் என்று ஆணை யிடுகிறார் குருநாதர்.

"ஏதேது செய்திடினும் ஏதேது பேசிடினும்
ஏதேது சிந்தித்திருந்திடினும் — மாதேவன்
காட்டிடுவ தான அருட் கண்ணை விட்டு நீங்காது
நாட்டம் அதுவாய் நட"

என்பது அப்பாடல். இப்பாடல் குருஞானசம்பந்தர் பாடியதே ஆயினும் தமது குருநாதர் ஞானப்பிரகாசர் தமக்கு அறிவுறுத்தியதையே குருஞானசம்பந்தர் இப்பாடல் வழி வெளிப்படுத்தியுள்ளார். பாடியது மட்டுமல்லாமல் அக்குருவாணையைத் தமது வாழ்க்கையிலும் கடைப்பிடித்து நடந்து அனுபவஞானமும் பெற்றுள்ளார். அநுபூதிமானாக உயர்ந்ததனால் தான் அடுத்துவரும் மற்றொரு பாடலில் இவ்வனுபூதி கைவந்தபோது நான்செய்கின்ற எல்லாச் செயல்களும், பேச்சுக்களும், நினைப்புக்களும் எல்லாமும் இறைசெயலே என்பதைக் காண்கிறேனே தவிர என் செயலே காண்கிலேனே என்கிறார்.

20342

"ஏதேது செய்தாலும் ஏதேது சொன்னாலும்
ஏதேது சிந்தித் திருந்தாலும் — மாதேவா
நின்செயலே என்று நினதருளாலே உணரில்
என் செயலே காண்கிலே னே"

என்பது அப்பாடல். இவை இரண்டு பாடல்களிலும் செயல், வாக்கு, சிந்தித்தல் எனும் மூன்றும் முறைமாறாமல் அமைந்துள்ளமை குறிக்கத்தக்கது. மனம், மொழி, மெய் என்னும் மூன்றும் இங்கு, மெய், மொழி, மனம் என்னும் அமைப்பில் கூறப்பட்டுள்ளன. இம்மூன்றினாலும் செய்யப்பெறும் செயல்கள் அனைத்தும் இறைவனின் அருட்கண்ணையே துணை எனக்கொண்டு செய்யப்பெற வேண்டும். இம்மனநிலை நமக்கெல்லாம் உருவாக இறையருள் கூட்டுவிப்பதாக. தை மாதம் 16 ஆம் தேதி சச்சிதானந்த விநாயகர் உள்ளிட்ட 16 மூர்த்திகட்குக் குடமுழுக்கு நிகழ்ந்திருப்பதும் திருவருட் பொருத்தமாகவே உள்ளது.

வாழ்த்து :

இத்திருக்குடமுழுக்குப் பெருவிழாவில் கலந்து கொண்டுள்ள புண்ணிய சீலர்கள் அனைவரும் எல்லா நலன்களும் பெற்று நீடு வாழவும் இவ்வையகம் தூய்மையான பக்தியுணர்வு கொண்டு துயர் நீங்கி இன்பம் அடையவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

"தன்னை அறிவித்துத் தான்தானாச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழை" — ஸ்ரீ மெய்கண்டார்.

கட்டுரை எண். 13.

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

வாக்குக்கள் நான்கு: அவை 1. வைகரி வாக்கு, 2. மத்திமை வாக்கு, 3. பைசந்தி வாக்கு, 4. சூக்குமை வாக்கு என்பன. இவை நான்கும் சுத்தாத்துவாவில் வசிப்பவருக்குச் சூக்குமகாரியங்களாகவும் அசுத்தாத்துவாவில் வசிப்பவருக்குத் தூலகாரியங்களாகவும் இருக்கும். இனி இவற்றைப்பற்றித் தனித்தனியே சிந்திக்கலாம்.

வைகரி வாக்கு :

உடம்பின்கண் எழுகின்ற உதானவாயு பொருந்துதலினுலே மத்திமைத் தானத்திலே சூக்கும வடிவாய்ப் பிரிந்து தோன்றிய அக்கரங்கள், பிராணவாயுவினல் செலுத்தப்பட்டு எழுந்து புறத்தே தூலவடிவமாய் வருதலை உடையது வைகரிவாக்கு. இது, தன் செவிக்கும் பிறர் செவிக்கும் கேட்கப்படுவதாயும் நினைத்த பொருளைச் சொல்லும் சொல்லாயும் சொல்வானுக்கும் கேட்பானுக்கும் ஒற்றுமையுணர்வு உண்டாதற்கு ஏதுவாயும் உள்ளது.

" வைகரி செவியிற் கேட்பதாய் அத்தவசனமாகி
மெய்தரும் உதானவாயு மேவிட விளைந்த வன்னம்
பொய்யற அடைவு உடைத்தாய்ப் புந்திகாரணமதாகி
ஐயமில் பிராணவாயு அடைந்து எழுந்து அடைவு
[உடைத்தாம். ',

என்னும் பாடல் வைகரி வாக்கினை விளக்கும் பாடலாம்.

மத்திமை வாக்கு :

சூக்கும ரூபமாய்ப் பிரிந்து விளங்கும் அக்கரங்களாகியும் சொல்லுவான் தன்னுள்ளே உணர்வதாயும் தனக்குக் கேட்பதாயும் பிறர் செவிக்குக் கேட்கப்படாததாயும் கண்டத்திலே விளங்குவது மத்திமை வாக்கு ஆகும்.

" உள்ளுணர்வு ஓசையாகிச் செவியினில் உறுதல் செய்யா
தெள்ளிய பிராணவாயு விருத்தியை உடையதன்றித்
தெள்ளி அக்கரங்கள் சிந்திடும் செயலதன்றி
மெள்ளவே எழுவதாகும் மத்திமை வேறதாயே "

என்பது அக்கருத்துடைய பாடலாம். மத்திமைத்தானத்தில் பிராணவாயு தொழிற்படாது உதரனவாயு மாத்திரம் தொழிற் படுதலின், "எண்ணிய பிராணவாயு விருத்தியை உடையதன்றி" என்று கூறினர்.

பைசந்தி வாக்கு :

பல நிறங்களையும் சூக்கும வடிவாய் ஒடுக்கிக்கொண்டு தான் பிரகாசித்து நிற்பதாகக் கூறப்படும் மயிலின் முட்டையினைத் தாங்கியிருக்கும்நீரைப்போல, பல்வேறுவகைப்பட்ட எழுத்துக்கள் வெவ்வேறு பிரிவாகித் தோன்றுதலாகிய முறையை இதயத் தானத்தில் சிறிதும் தெரியாமல் ஒடுக்கிக்கொண்டு சுயம்பிரகாச மாகி பைசந்தி வாக்குப் பொருந்தியிருக்கும். இக்கருத்துக்களை,

" வேறுமைப் பட்ட வன்னம் வெவ்வேறு விபாக மாகித்
தோற்றுதல் அடைவு ஒடுக்கிச் சுயம்பிர காச மாகிச்
சாற்றிய மயிலின் அண்டம் தரித்திடும் சலமே போன்று
ஆற்றவே உடைய தாகிப் பைசந்தி அமர்ந்து நிற்கும். "

என்னும் பாடலின் மூலம் ஆசிரியர் விளக்குகிறார்.

சூக்குமை வாக்கு :

பரசரீரத்தினுள்ளே ஞானவடிவாய் விளங்குதலும், ஆன்ம ஞானத்தை விளக்குதலும் ஆகிய இரண்டு இலக்கணங்களை உடையது இவ்வாக்கு. இவ்வாக்கின் தொழில் கெட்டு, ஆன்மா, வாக்குக்கள் நான்கினுக்கும் வேறாகத் தன்னைக் காணுமாயின் அவ்வான்மாவுக்குப் பேரறிவும், ஆனந்தமும், சுதந்திரமும், நித்தியத்துவமும் உண்டாகும்.

" சூக்குமை வாக்கது உள்ளோர் சோதியாய் அழிவ தின்றி
ஆக்கிடும் அதிகாரத்திற்கு அழிவினைத் தன்னைக் கண்டால்
நீக்கமில் அறிவு ஆனந்தம் முதன்மைநித்தியமும் உடைத்தாய்ப்
போக்கொடு வரவு இளைப்பும் விகாரமும் புருடன் இன்றாம் ",

என்னும் பாடல் அக்கருத்தினை விளக்குகிறது.

நான்கு வாக்குக்களின் இயைபு :

சூக்குமை வாக்குக்கு இடம் மூலாதாரம். இவ்வாக்கு மூலா தாரத்திலிருந்து எழுந்து நாபியை அடையும்.

நாபியை அடைந்து அங்கே எழுத்துக்களை வேறுவேறாகப் பிரியவிடாமல் அடக்கிக்கொண்டு, சூக்கும வடிவாய் நிர்விகற்ப உணர்விற்கு ஏதுவாய் இருக்கும். இந்நிலையில் அது 'பைசந்தி' எனப்படும்.

பின்பு அங்கிருந்து வாக்கு உதான வாயுவினால் உந்தப்பட்டு இருதயத் தானத்தை அடையும். அங்கே உதான வாயுவின் தொழிலால் எழுத்துக்கள் வேறுவேறாகப் பிரிவுபட்டுச் சூக்கும வடிவாய் விளங்கி மெல்லோசையாய்ச் சொல்லுவோன் தன்னுள்ளே உணரும் சவிகற்ப உணர்விற்கு ஏதுவாய் கண்டத் தானம் வரையில் நிற்கும். இந்நிலையில் அது மத்திமை எனப்படும்.

பின்பு அவ்வாக்குப் பிராண வாயுவினால் உந்தப்பட்டு எழுந்து பல், இதழ், நா, அண்ணம் என்னும் உறுப்புக்களில் பட்டு விகார மடைந்து சிதறித் தன்செவிக்கும், பிறர்செவிக்கும் கேட்கப்படுச் சவிகற்க உணர்வு உண்டாதற்கு ஏதுவாய் இருக்கும். இந்நிலையில் இது 'வைகரி' எனப்படும்.

தொல்காப்பியர் கருத்து :

இங்ஙனம் மூலாதாரத்திலிருந்து புறப்பட்ட காற்று, படிப் படியே நாபி, இருதயம், கண்டம், வாய் என்னும் இடங்களில் தங்கியிருந்து, பின்வெளிப்படும் அகத்து நிலையினையே சித்தாந்த ஆசிரியர்கள் வாக்குக்கள் எனக் குறிக்கின்றனர் தொல்காப்பியர்.

" எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி எழுதரு வளியின்
பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்து
அகத்தெழு வளி இசை அரில்தபநாடி
அளபிற்கோடல் அந்தணர் மறைத்தே "

என்னும் நூற்பாவில், அகத்தெழு வளி இசை அரில்தப நாடுதலும் அதன்வழி அளபிற் கோடலும் அந்தணர் நூலில்உண்டு என்கிறார். மேலும்,

" அஃதிவண் நுவலாது எழுந்து புறத்திசைக்கும்
மெய்தெரி வளி இசை அளபு நுவன்றிசினே "

என்னும் நூற்பாவில் அதனை நான் இங்கே கூறவில்லை; புறத்தி சைக்கும் முறையிலேயே அளவு கூறுகிறேன் என்றும் தொல் காப்பியர் கூறுகிறார். இலக்கண ஆசிரியர் அளவு கூறும் நிலையில் விட்டிருந்தாலும் சித்தியார் ஆசிரியர் இந்த இடத்தில் வாக்குக்கள் என்னும் பகுதியில் அகத்தெழு வளி இசையினை இங்ஙனம் விளக்கி யிருக்கிறார் என எண்ணலாம்.

(தொடரும்)

குருமூர்த்த ஆலயங்களின் குடமுழுக்குப் பெருவிழா

திருக்கயிலாய பரம்பரை, தருமபுர ஆதீனம் திருமஞ்சன வீதியில் அமைந்துள்ள அருள்மிகு சச்சிதானந்த விநாயகர் திருக்கோயில் மற்றும் வடக்குக் குருமூர்த்த ஆலயங்கள் சுமார் ஒன்றரை லட்சம்ரூபாய் செலவில் திருப்பணிகள் செய்யப்பெற்று குடமுழுக்குப் பெருவிழா ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நினைவாக 29--1—89 ஞாயிற்றுக்கிழமை காலை மணி 10-10க்கு மேல் 11-04 மணிக்குள் மிகச்சிறப்பாக நடந்தேறியது.

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவுளப் பாங்கின் வண்ணம் 26—1—89 வியாழக்கிழமை மாலை தொடங்கி ஆறுகால யாகபூஜைகள் மிகச்சிறப்பாக நிகழ்த்தப்பெற்றன. தஞ்சைக்கே உரிய கலை அழகுடன் அமைக்கப்பெற்றிருந்த வண்ண மிகு யாகசாலையில் அருள்மிகு. சச்சிதானந்த விநாயகருக்கு பஞ்ச குண்ட யாகமும் 15 குருமூர்த்த ஆலயங்களுக்கு மூன்று ஸ்நபனங்க யாகமும் 16 விமானகலசங்கட்கும் ஒரு ஸ்நபன யாகமும் 25 சிவாசாரியப் பெருமக்கள் நான்கு நாள்களும் யாக பூஜையை மிகச் சிறப்பாகச் சிவாகம நெறியில் நிகழ்த்தினர். 26—1—89 வியாழன் மாலை முதல் 29—1—89 கும்பாபிஷேக காலம்வரை பண்ணிசை வாணர்களால் திருமுறைப்பாராயணம், அகண்டபாராயணமாக (இரவும் பகலும் இடையீடு இன்றி) நிகழ்த்துவிக்கப் பெற்றது. நாள்தோறும் தருமைக்குருமணி அவர்கள் எழுந்தருளிக் காலை மாலை யாகபூஜைகளைத் தரிசித்து அன்பர்களுக்குத் திருவருட்பிரசாதங்கள் வழங்கியருளினார்கள். நூற்றுக்கணக்கான உள்ளூர் வெளியூர் அன்பர்கள் யாகபூஜைகளைத் தரிசித்துப் பேறுபெற்றனர்.

29—1—89 ஞாயிற்றுக்கிழமை காலை 8-45 மணி அளவில் மகா பூர்ணாகுதி நிகழ்ந்தேறியது. தருமைக் குருமணி அவர்கள் முன்னிலையில் காலை 10-30 மணி அளவில் ஸ்ரீ சச்சிதானந்த விநாயகருக்கும், 11-00 மணிக்கு பதினைந்து குருமூர்த்த ஆலயங்களுக்கும் மகா கும்பாபிஷேகம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவில் காஞ்சி தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்

ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகளும், ஆயிரக் கணக்கான பக்தர்களும் கலந்து கொண்டு கும்பாபிஷேக தரிசனம் செய்தனர். அன்று மாலை 4-00 மணி அளவில் மகாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. மகாகும்பாபிஷேக நிறைவில் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அன்பர்களிடையே அருளுரை வழங்கி ஆசீர்வதித்தார்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் அருளுரை இவ்விதழில் தனியே 118 ஆம் பக்கம் முதல் 123 முடிய வெளியிடப்பெற்றுள்ளது.

கும்பாபிஷேக விழாவை ஒட்டி வடக்குக் குருமூர்த்த வாயிலில் அமைக்கப்பெற்றிருந்த ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அரங்கில் ஜனவரி 27, 28, 29 வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாள் களும் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு பல்வேறு அங்கங் களுடன் மிகச் சிறப்பாக நடந்தேறியது. 27—1—89 வெள்ளிக் கிழமை ஆதீன அருள் வரலாற்றுத் திருநாளாகக் கொண்டாடப் பெற்றது. திருவண்ணாமலை ஆதீனம் குருமாகசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (தவத்திரு. குன்றக்குடி அடிகளார்) முதல் திருநாள் நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்தார்கள். 28—1—89 சனிக்கிழமை நடைபெற்ற பண்டார சாத்திரத் திருநாளுக்குத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் கயிலை மாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் தொடக்கவுரை யாற்றினார்கள் 29—1—89 ஞாயிற்றுக்கிழமை ஆதீன அடியவர் அருள்நூல் விளக்கத் திருநாளாக அமைந்தது. காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் தொடக்கவுரையாற்றிச் சிறப்பித்தார்கள்.

மூன்றுநாள் விழாவிலும் சைவத்தமிழ் அறிஞர்கள் பலரும் பங்கேற்றார்கள். நாள்தோறும் திருமுறை இசையரங்குகள் நடை பெற்றன. நாடகம், இன்னிசை விரிவுரை, வில்லுப்பாட்டு முதலிய கலைநிகழ்ச்சிகளும், வேதபாராயணம் மற்றும் திருமுறைபாராயணங் களும் நடைபெற்றன. விழாமலராகத் 'தருமைக் குருமணிகளின் அருள் வரலாறு' மற்றும் தருமை ஆதீனம் ஒன்பதாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு தேசிக சுவாமிகள் அருளிய 'சித்தாந்த நிச்சயம்' ஆகிய இருநூல்கள் வெளியிடப் பெற்றன. பக்தர்கள் மகாகும்பாபிஷேக தரிசனம் செய்தும் சொற்பொழிவு களைக் கேட்டும் பயன்பெற்றனர்.

பொறியியலும் ஆன்மீகமும்

முனைவர். திரு. ச. முத்துக்குமரன்,
துணைவேந்தர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

1. பொறியியல் :

1.1 பொறியியல் துறைகளில் கல்வி, மூன்று நிலைகளில் கற்பிக்கப்படுகிறது. அதாவது: (1) கைவினைஞர் நிலை, (2) (பொறியியல்) மேற்பார்வையாளர் நிலை, (3) பொறியாளர் பொறியியல் வல்லுனர் நிலை. இவற்றுள் முதலாவது நிலை அறிவியல் துறையைச் சார்ந்தது அல்ல. மூன்றாவது நிலை அறிவியல் துறைகளில் சேர்ந்தது. இரண்டாவது நிலைக் கல்வி ஓரளவுக்கு அறிவியல் சார்ந்ததும் பெருமளவு அதைச் சாராததும் ஆகும். பொறியியல் துறையானது முழுக்க முழுக்க, கை வினைஞர் நிலையிலேயே பல நூற்றாண்டுகளாக இருந்தது என்பர் மேலைநாட்டு அறிஞர். கடந்த சில நூற்றாண்டுகளிலேயே இது ஒரு அறிவியல் துறையாக வளர்ந்திருக்கிறது.

2. நமதுநாட்டுப் பண்டைய பொறியியல்துறை நிலை :

2.1 நம் நாட்டைப் பொறுத்தவரை பண்டையகாலத்தில் நம் பொறியியல்துறை அறிவு பொது பொறியியல் (Civil Engineering) என்று சொல்லப்படுகின்ற துறையில்தான் கணிசமான அளவு முன்னேறி இருந்திருக்கிறது. பண்டைய கால கோயில்கள், ஒரு பொதுக்கட்டிடம் எப்படி அமைக்கப்படல்வேண்டும், அதன் வாசல்கள் இருக்கவேண்டிய இடம், அவ்வாசல்கள் அமைப்பு, இன்னோரன்ன பல நுட்பமான கேள்விகளுக்குப் பதிலளிக்கும் முறையில் அமைந்துள்ளன. அதுமட்டுமல்ல, ஒரு உயரமான கட்டிடம் அமைக்கும் வழி, தனங்கள் அமைக்கும் வழி, பல மாடிக்கட்டிட அமைப்பு, இவற்றை விளக்கும் மாதிரிகளாக அமைந்திருக்கின்றன. இவற்றை விளக்குல் நூல்கள், கோயில்கள், கோபுரங்கள் எங்ஙனம் இருக்க வேண்டும் என்று விளக்குகின்றன; ஆனால் ஏன் என்பதை விளக்கவில்லை; சுவர், தூண் இவற்றின் அளவுகளைக் கணிக்கும் விதிகளைச் சொல்லாமல், அளவுகளை மட்டுமே சொல்லியிருக்கின்றன.

2.2 ஆற்று வெள்ளத்தைக் கட்டுப்படுத்திப் பாசனத்திற்குப் பயன்படுத்துவது என்ற கலையைப் பொறுத்தவரை நமது நாடு மிகுதியாக அதை அறிந்து பயன்படுத்தியுள்ளது தெளிவு. செங்கல்பட்டு மாவட்ட ஏரிகள் தொகுப்பு உலகில் வேறு எங்கும் காணமுடியாதது. மிகநல்ல முறையிலே அவற்றை நமதுமுன்னோர் அமைத்திருக்கிறார்கள். அதுபோலவே, காவிரி ஆற்று நீர் சோழ

நாட்டிலே மிகச்சிறந்த முறையிலே பல சிறு ஆறுகள் மூலம் நிலங்களுக்குப் பாய்ச்ச ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. காவிரியில் கட்டப்பட்ட கல்லணை மிகத்தொன்மையான ஒரு நல்ல அணை என்று எல்லோராலும் போற்றப்படுகிறது. ஆனால் இவற்றைப் பற்றிய நூல்கள் இல்லை. நம் முன்னோர் இவற்றைச் சிறந்த முறைகளில் நிர்மாணித்திருந்தாலும், இவற்றைப்பற்றிக் குறிப்புகள் எதுவும் எழுதி வைத்ததாகத் தெரியவில்லை.

2.3 நமதுகோயில்களில் உள்ளதேர்கள்,சாதாரணவண்டிகள், வீட்டில் பயன்படுத்தப்படும் அம்மி, குழவி, மாவு அரைக்கும் இயந்திரம், இட்லிக்கு அரைக்குப் இயந்திரம், உரல் இவையாவும் இன்றைக்கு இயந்திரப் பொறியியல் என்று சொல்லப்படும் துறையைச் சார்ந்தவை. இவையாவும் நல்ல முறையிலே இன்றும் செய்யப்படுகின்றன. ஆனால் இவைகளைப்பற்றியும் நமக்கு நூல்கள் இல்லை.

3. ஒரு எடுத்துக்காட்டு :

3.1 மனையடி சாத்திரம் என்று ஒரு பழையநூல் உள்ளது. அது வீடு கட்டுவது பற்றி எழுதப்பட்ட நூல். அதில் எந்த மனை வீடு எழுப்ப உகந்தது என்று விளக்க ஒரு குறிப்பு உள்ளது: "ஒரு அடி அகலம் ஒரு அடி நீளம் உள்ள சதுரக் குழி ஒன்றை ஒரு அடி ஆழத்திற்குத் தோண்டவும். தோண்டி எடுத்த மண்ணைத் திரும்ப அந்தக்குழியில் உதிரியாக நிரப்பவும். அப்பொழுது அந்த மண் குழியை நிரப்பிய பின் மீதமிருந்தால் அந்த மனை நல்ல மனை, வீடு கட்ட உத்தமம். மண், குழியைச் சரியாக நிரப்பினால் அந்த மனை வீடு கட்ட மத்திமம். கடவுளை வணங்கிப் பின் வீடு கட்டலாம். மண் குழியை நிரப்பத் தவறினால், அதாவது குழியின் ஒரு பகுதியையே அந்த மண் நிரப்பினால், அந்த மனை அதமம். அந்த மனையில் வீடு கட்டக்கூடாது.

3.2 இன்றைய அறிவியல் கண்ணோட்டத்தில் பார்த்தால் முன் குறிப்பிட்ட குறிப்பு அந்த மனையில் உள்ள மண்ணின் கெட்டித்தன்மையைக் கணிக்கும் முறையாகக் கொள்ளலாம். அதாவது, மண் குழியை நிரப்பிய பின் மீதமிருந்தால், அந்த மனையிடம் நன்றாகக் கெட்டியாக உள்ளது என்றாகிறது. குழியை நிரப்ப முடியவில்லை என்றால் அந்த மனையில் மண் கெட்டியாக இல்லை, மிகவும் தளர்ந்ததாக இருக்கிறது என்றாகிறது. மண்ணின் கெட்டித் தன்மையைக் கண்டறிய இந்த முறை ஒரு எளிய முறை எனலாம். இந்த முறையை நன்கறிந்த ஒருவர் மிக எளிதாக மண்ணின் கெட்டித் தன்மையை அறிய முடியும்.

3.3 ஆனால், இந்த நூலை எழுதியவர் "இந்தச் சோதனையினால் கண்டறிவது இந்தமண்ணின் ஒப்புமைச் செறிவு; 'Relative Density' மண்ணின் தாங்கும் சக்தி ஓரளவுக்கு அதன் ஒப்புமைச் செறிவைப் பொருத்தது. ஆகவே இந்தச் சோதனை மண்ணின் தாங்கும் சக்தியை அறியப் பயன்படும்" என்று எழுதவில்லை. இதுமாதிரியான விளக்கம் கூறாமையால், இந்நூலாசிரியர் இதை அறிந்திருக்க வில்லை என்று நாம் கூறவியலாது. அதுபோலவே நமக்குத் தெரியாத இன்னொரு காரணம் இருந்து அதைத்தான் இந்த நூலாசிரியர் அறிய இந்தச் சோதனை முறையை நமக்கு வகுத்துக் கொடுத்தாரா? என்பதும் நாம் சொல்ல முடியாது.

4. புதிய கண்டுபிடிப்புக்கள் :

4.1 அறிவியல், தொழில் நுட்பம், இவற்றிலே நேற்றும் இன்றும் நாளையும் பலர் பலவற்றையும் கண்டுபிடிக்கின்றனர். இவையாவும் அறிவியல் மூலமாக அறிவியல் துறை முறைகளிலே கண்டுபிடிக்கப்பட்டவை என்று கூற முடியுமா? கணித மேதை இராமானுசம் கண்டுபிடித்தவையே அறிவியல் முறைகளிலே கண்டு பிடித்தவை என்று கூறமுடியாது. அவர் ஒரு சமன்பாட்டை எழுதி அதன் பிறகு அதற்கு அறிவியல் முறை விளக்கம் தந்தநாகச் சொல்வர். இதுபோல் அவர்எழுதி வைத்த குறிப்புகள் சிலவற்றைச் சரியானவை என்று அதற்கு அறிவியல் விளக்கங்கள் தர இன்றும் பலர் முயல்கின்றனர்.

4.2 இயந்திரவியல் துறை கண்டுபிடிப்புகளான நீராவி இயந்திரம், பெட்ரோல், டீசல் இயந்திரங்கள், ஆகாய விமானம் இவற்றை எல்லாம் கண்டறிந்தவர்கள் இவற்றை இன்று சொல்லப் படும் அறிவியல் முறைகளிலே கண்டுபிடிக்கவில்லை. அன்றும் இன்றும் பல கண்டுபிடிப்புக்கள் கைவினைஞர்களாலேயே உருவாகின்றன. உருவான பின்னர், அவற்றிற்கு அறிவியல் வல்லுனர்கள் விளக்கம் தந்திருக்கின்றனர். அல்லது அவற்றிலே சிறு சிறு மாற்றங்கள் செய்து அவற்றின் செயல்திறனில் மேம்பாட்டை வளர்த்திருக்கிறார்கள்.

5. பண்டைய அறிவியல் தொழில் நுட்பச் சிறப்பு :

5.1 நமது பண்டைய நூல்களில் தொழில் நுட்பக் குறிப்புகள் அபூர்வமாகத்தான் காணப்படுகின்றன. ஆனால் அறிவியல் கருத்துக்கள் ஏராளமாய்க் காணக் கிடைக்கின்றன.

5.2 தமிழில் பூமியும் விண்ணில் தெரியும் அண்டங்கள் யாவும், கோள்கள் எனப்பட்டன. கோள் என்ற சொல் தேவாரம், திருவாசகம் இரண்டிலும் காணப்படுகின்றது. இந்த இரண்டு சொற்களும் கோளம் 'Sphere' என்ற சொல்லை உணர்த்துவதால்

நம் முன்னோர் குரு, சுக்ரன், சந்திரன் இவையாவும் கோள வடிவினை எனத்தெரிந்திருந்தார்கள் என்பதில் ஐயமில்லை.

5.3 மாணிக்கவாசகரின் "புல்லாகிப்பூடாகி" என்று தொடங்கி அதன் பின் வரும் பல அடிகள் புல் பூண்டு இவற்றுக்கெல்லாம் உயிருண்டு என்று அவர் அறிந்திருந்தார் என்பதை உணர்த்துகின்றன. மாணிக்கவாசகர் கல்லுக்கும் உயிருண்டு என்று பாடியிருக்கிருர். இன்றைய அறிவியல் கல்லுக்கு உயிரில்லை என்கிறது. மாணிக்கவாசகர் "கல்லாகி" என்று ஏன் பாடினுர் என்பதை இன்று நாம் உணர முடியவில்லை.

5.4 கோயில்களில், நவக்கிரகங்கள் வைக்கப்படும் முறை நோக்கத்தக்கது. ஞாயிறு மையத்தில் வைக்கப்பட்டு மற்ற கோள்கள் சுற்றிலும் வைக்கப்படுகின்றன. இது ஏதோ ஒரு குருட்டாம்போக்கில் இவ்வாறு அமைந்தது என்று கூறமுடியாது. மேலும் ஆண்டுக் கணக்கை மிகத் துல்லியமாக அன்றைய தமிழர் அறிந்திருந்தனர் என்பதும் நாம் காணும் உண்மை.

5.5 வள்ளுவர் அரண் என்ற அதிகாரத்திலும், உழவு, மருந்து என்ற அதிகாரங்களிலும் கூறுகின்ற அறிவியல், மருத்துவவியல், பயிர்த்தொழிலியல்,பொறியியல் கருத்துக்கள் இந்தத் துறைகளிலே அவர்தம் ஞானத்தை அறிவுறுத்துகின்றன.

5.6 நம் முன்னோர் இயற்கையின் விதிகளையும் ('Laws') மறை பொருள்களையும் ('Secrets') பெருமளவு அறிந்திருந்தனர் என்பதற்கு இதுபோன்று பல எடுத்துக்காட்டுகளைக் காட்டமுடியும். மேலும் அவர்கள் இயற்கையுடன் எங்ஙனம் இயைந்து வாழ்ந்தனர் என்பதும் நினைத்தற்குரியது.

5.7 நம் முன்னோர் கட்டிய பல கோயில்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் நிலைத்து நிற்கின்றன. ஆனுல் அவற்றைக் கட்டிய அரசர்களின் அரண்மனைகள் இன்று இல்லை. அதற்குக் காரணம் அவர்கள் எந்தக் கட்டிடம் நான்பட நிற்கவேண்டுமோ அதை அங்ஙனம் கட்டி மற்றவற்றை வேறு மாதிரி கட்டியதே காரணம் எனலாம். அன்று கட்டிடம் கட்டப் பயன்படுத்திய மரம், செங்கல் சுவர், செங்கல் தளம் இவை யாவும் சுலபமாக இடித்து எடுக்கப்பட்டு மறுபடியும் பயன்படுத்தக் கூடியவை. ஆகவே வளர்ந்து வரும் தேவைக்கேற்ப வீடுகளை மாற்றி அமைக்க அந்தக் கட்டிடப் பொருள்கள் திரும்பத் திரும்பப் பயன்படுத்தப்பட்டன. ஆனுல் இன்று? இரும்புக் கற்காரையில் 'Reinforced concrete' கட்டப்படும் வீடுகளை மாற்றியமைக்க – அவற்றை இடிப்பதே பெரும்பிரச்சனை – அதன்பின் அந்தப் பொருட்களைத் திரும்பப்பயன்படுத்த இயலாது. இவற்றை மண்ணிலே புதைத்தாலும் இவை மண்ணோடு மண்ணுகக் கலக்க வெகுகாலம் பிடிக்கும்.

5.8 நம் முன்னோர் வளர்த்த மரங்களைப் பாருங்கள். வாழையை எடுத்துக் கொண்டால் அதன் எல்லாப் பகுதிகளும் பயன்படும். நாம் உண்ணலாம் அல்லது நம்மாடுகள் உண்ணலாம். சில பகுதிகள் நாம்பயன்படுத்திய பின் மாட்டுக்கு உணவாகின்றன. தென்னை பனை இவையும் இவ்வண்ணமே எல்லாப் பகுதிகளும் பயன்படுத்தக் கூடியவை உண்ண, கூரை வேய, உத்திரங்களாகப் பயன்படுத்த, அடுப்பு எரிக்க, நாராகப் பிரித்து எடுக்க இவ்வாறு ஒவ்வொரு பகுதியும் பயன்படும்.

6. முடிவுரை :

6.1 இந்தக் கட்டுரையின் முந்திய பகுதிகளில் எடுத்துக் காட்டியது போல் இன்னும் பல எடுத்துக்காட்டுகள் கூறலாம். இவையெல்லாம் நமக்கு அறிவுறுத்துவது நம் முன்னோர் இன்று நாம் அறிந்த அறிவியல், பொறியியல் கருத்துக்கள், உண்மைகள், இயற்கை விதிகள் போன்ற பலவற்றை அறிந்திருந்தார்கள். அவர்கள் நாம் இன்று சிறப்பாகக் கருதும் அறிவியல் முறைகளைப் பின்பற்றாமலே இவற்றை அறிந்திருந்தார்கள். அவர்கள் ஆன்மீகத்திலும் திளைத்திருந்தார்கள். ஆகவே அவர்கள் இயற்கை விதிகள், இரகசியங்கள் பலவற்றையும் ஆன்மீக முறையில் அறிந்திருக்கக் கூடும் என்று எண்ண இடமிருக்கிறது. அவர்கள் பின்பற்றிய ஆன்மீக முறைகளை நாமும் பற்றி இயற்கையோடு இயைந்து வாழமுயல்வோம். அதற்கு ஆண்டவன் இறைவன் இறைவி துணையை நாடுவோம்.

6.2 நம் தமிழ்நாடு வள்ளுவர் வகுத்த ஒரு நாட்டின் சிறப்புடன் திகழ்கிறது. இதன் வளங்களை ஒரு சில சுயநலவாதிகள் பேராசையால் நாட்டுநலனுக்கு எதிராகப் பாழாக்குவதை பார்த்துக் கொண்டு நாம் வாளா இருக்கக் கூடாது. இந்தக் கருத்தை "மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலைய, மருத்துவ, கல்வி மற்றும் கலாச்சார அறக்கட்டளை" நமக்கெல்லாம் சுட்டிக்காட்டி எதிர் நடவடிக்கை எடுக்க நம்மைத் தூண்டுகிறது. ஆன்மீக உணர்வின்றி அறிவியல் தொழில் நுட்பவியல் கருத்துக்களை மட்டும் வளர்த்து அத்துறை முறைகளைப் பின் பற்றி இயற்கையோடு இயையாமல், செயற்கையான வாழ்வில் மயங்கி, வருங்காலம் பற்றியும் நம் சந்ததியினர் பற்றியும் கவலையன்றி, கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று ஆடி, குன்று இயற்கை வளங்களையும் குன்றும் படியாகக் குலைத்து வாழும் இன்றைய நாகரிக நெறியினைத் தணிக்க இவ்வறக்கட்டளை எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாம் துணை நிற்போம்.

[நன்றி: மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி இயற்கை வள மேம்பாட்டுச் சிறப்பிதழ்]

திருமூலரின் பொருளாதாரச் சமத்துவச் சிந்தனைகள்

முனைவர். தா. ஈசுவரபிள்ளை
விரிவுரையாளர்,
இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

சமயம் என்பது வெறும் நம்பிக்கைகளின் தொகுதி மட்டுமன்றிச் சமுதாயத்தின் உற்பத்தி உறவுகளுடன் தொடர்புடையதாகவும் விளங்குகிறது. நாயன்மார்களும், ஆழ்வார்களும் உருவாக்கி வளர்த்த பக்தி இயக்கத்தின் முன்னேக்கிய வளர்ச்சி நிலைக்கு அக்காலச் சமுதாய, பொருளாதாரச் சூழல்களும் காரணமாக அமைகின்றமையை அறிஞர்கள் சுட்டுவர். சமுதாய, பொருளாதார நிலைகளில் காணப்பட்ட உயர்நிலையினர், தாழ் நிலையினர் என்ற பாகுபாடுகளில் தாழ்நிலையுற்றவர்கள், பல நிலைகளிலும் நசுக்கப்பெற்று அல்லல் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். உயர் சாதியினர் - தாழ்ந்த சாதியினர், பொருளாதார நிலையில் மேம்பட்டவர் - நலிவுற்றவர் ஆளுவோர் - ஆளப்படுவோர், சுரண்டுவோர் - சுரண்டப்படுவோர், ஆண்டான் - அடிமை என்ற பாகுபாடுகள் இடம்பெற்றிருந்தன. இந்நிலையில தாழ்நிலையுற்றோர் தமக்கு ஒரு விடிவுகாலம வராதா என ஏங்கி நின்றநிலையில் பக்தி இலக்கியச் சான்றோர்கள் எல்லாம் வல்ல இறைவன் ஒருவன் உண்மையை மக்களுக்கு எடுத்துக்கூறி ஒளியற்ற வாழ்க்கையில் புத்தொளி காட்டினர். இறைவன் எல்லா வல்லமைகளும, அருங் குணங்களும வாய்க்கப் பெற்றவன் என்றும், அவன், சாதி, மத பொருளாதார வேறுபாடுகளைக் கருதாது உண்மை அன்புடன் வழிபடுவோரைக் காத்து ஆதரிப்பவன் என்றும் மக்களிடையே சமயக் கருத்துக்களைப் பரபபியமையால் பக்தி இயக்கம் மக்கள் இயக்கமாகப் பரவி, பெருகி, தழைத்தது. எனவே இதன் அடிப்படையில் அருளப்பெற்ற திருமுறைகளிலும், திவ்வியப் பிரபந்தத்திலும் சமுதாய பொருளாதாரச் சமத்துவச் சிந்தனைகள் இடம் பெறும போக்கை உணர முடிகிறது. இவ்வடிப்படையில் திருமூலர் இயற்றியருளிய திருமந்திரத்தல் இடம்பெறும் பொருளாதாரச் சமத்துவச் சிந்தனைகளை 'முதல் தந்திரம்' என்ற பகுதியில் இடம்பெறும் கருத்துக்களைச் சான்றுகாட்டி இவண் விளக்கலாம்.

சமுதாயத்தில் பொருளாதார நிலையில் மேம்பட்டவர்கள் அரசியல், சமுதாய நிலைகளில் உயர்நிலையுற்றுச் சமுதாயத் தரப் பிரிவில் மேல்நிலையிலும் மகிழ்ச்சி நிறைந்த இன்ப வாழ்க்கை வாழ்ந்த நிலையிலும் காணப்பட்டனர். ஆனால் வறுமையுற்ற வறியவர்கள் அரசியல், சமய சமுதாய, பொருளாதார நிலைகளில் இழிநிலையுற்றும், இயலாமை நிலையுற்றும் தாழ்நிலை அடைந்து காணப்பட்டனர். (பாடல் 208, 209). இந்நிலையை அகற்றிச் சமத்துவச் சமுதாயம் மலரத் திருமூலர் பாடுபட்டுள்ளார்.

பொருளாதார வளம் படைத்தவர்கள் இல்லாதவர்களுக்குப் பகிர்ந்தளிக்கவேண்டும். அதற்கு அவர்கள் பொருள் மீது கொண்டுள்ள பற்று அற வேண்டும். எனவே திருமூலர், பொருள் பிறர் கொள்ளப் போய்விடும் (168), உயிர் நம் உடலைவிட்டுப் பிரியும் போது பொருள் கூட வராது (169), கூற்றுவன் நம் உயிரைக் கொள்ள வரும்போது பொருளைக்கொண்டு செல்ல முடியாது (172), செல்வம் கவிழும் நீர்மிசைச் செல்லும் கலம் போன்றது. (173), என்று செல்வம் நிலையாமையை அறிவுறுத்துகின்றார். கிழக்கெழும் ஞாயிறு மேற்கில் விழும்; இளங்கன்று எருதாய் சில நாட்களில் மாறிவிடும் (177), பாலன் இளையனாகிப் பின் விருத்தனாகிவிடுவான் (191), உயிர் நிலைத்து நிற்காது. கருமயிர் வெண்மயிர் ஆகிவிடும் (192) என்று பல நிலைகளில் யாக்கைநிலையாமை, அழகு நிலையாமை, வாழ்க்கை நிலையாமை ஆகியவற்றை எடுத்துக்கூறி மக்கள் மனதில்-குறிப்பாகச் செல்வர் மனதில்-பொருட் பற்று நீங்குவதற்கு வழியமைத்துக் கொடுக்கின்றார்.

இவ்வாறு நிலையாமையை எடுத்துக்கூறிய திருமூலர் இவற்றை உணர்ந்து ஆப விதி நாடி அறஞ்செய்யுங்கள் (250) என்றும், யாவர்க்கும் உண்ணும்போது ஒரு கைப்பிடிச் சோறு அளியுங்கள். (252) என்றும், தழுக்கிய நாளில் தருமமும் செய்வீர் (254) என்றும் அவரிவர் என்னாது வறியவர் யாவராயினும் சாதி, மதவேறுபாடுகள் பாராது கொடை செய்யுங்கள், பிறர் பசித்திருப்பதைப் பார்த்து விட்டு நீங்கள் மட்டும் உண்ணாதீர். பழம் பொருள்களைப் போற்றி உங்களுக்கு மட்டும் பாதுகாக்காதீர்கள் (256) என்றும் இடுவதும் ஈவதும் எண்ணுங்கள் (268) என்றும் கொடைப்பண்பை வலியுறுத்திச் செல்வர்களின் செல்வம் வறியவர்களுக்கும் பரவுதற்குரிய வகை செய்கின்றார். இக்காலத்தில் பொருளாதார வல்லுநர்களால் விளக்கப்பெறும் செல்வத்தைப் பரவலாக்குதல் என்ற சிந்தனை திருமூலரிடம் அன்றே இடம்பெற்றமையை இவை காட்டுகின்றன.

அடுத்து, தன்னிடம் உள்ள செல்வத்தைப் பிறருக்குப் பகிர்ந்தளித்தவர் ஈசனுடைய கழலடிகளைக் காண்பர் (266); ஏழை எளியவர்களிடம் அன்புகொள்ளுதலே சிவமாகும் (270); என்று இறையடி நிழல் என்ற உயர்ந்த குறிக்கோளைக் காட்டியும் நல்லறம் செய்யாதவர் செல்வம் வட்டிகொண்டு ஈட்டிய மண்ணின் மூகந்திடும் (260) கொடுத்துவக்கும் இன்பம் அறிகிலார் அறம் அறியாதார் ஆவர் (267) இவ்வாறு கொடையின்பம் அறியாதார்கட்கு இருமல் சோகை, ஈளை, வெப்பு போன்ற நோய் வந்தமையும் (263) இத்தகைய கொடியவர்கள் இறைவன் பாதம் அறியும் திறனை அறியாதவர்களாவர் (262) என்று கொடை கொடுக்காதவர் பண்பை பழித்துக் கூறியும், அச்சுறுத்தியும் கொடைப் பண்பை வலியுறுத்துகின்றார். இதைப்போன்று கொடை கொடுக்காதவர்களைப் பார்த்து-யாம் வறியம் என்று எண்ணி மனதில் சோம்பலை வளர்த்து, உழைக்காது, செல்வர்கள் கடைவாயிலில் போய் நின்று இரக்கும் தன்மையுடையவர்களைப் பார்த்துச்-செல்வம் கருதிச் சிலர் பலர் வாழ்வெனும் புல்லறிவாளர்களைப் போற்றி புகழாதீர்கள் என அறிவுரைக் கூறும் போக்கையும் காண்கின்றோம் (269).

இவ்வாறு திருமூலர் இறைவன் புகழை எடுத்துரைக்கும் போக்கில் கொடைப்பண்பை வலியுறுத்திச் சமுதாயத்தில் மேட்டுக் குடியினர் - ஏழைகள் என்ற வேறுபாடுகள் நீங்கிச் சமத்துவச் சமுதாயம் உருவாவதற்குரிய சிந்தனைகளையும் வெளிப்படுத்தும் நிலையை உணரலாம்.

தருமை ஆதீனம்

ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர்.

பார்வையாளர் குறிப்பு நகல்

எல்லா வினையும் தீர்த்தருளும் எந்தை அய்யனையும் அன்னையையும், இத் திருத்தலத்தில் தரிசித்து மனம் மகிழ்கிறோம். எங்களது மலேசியா பக்தர்கள் பலருடன் இவ்விடம் வந்தபோது கனிந்த வரவேற்பு நல்கிய தேவஸ்தானத்தின் நன்மக்களுக்கும் எங்களது நல்வாழ்த்துக்கள்.

22—11—88 (ஒ-ம்) பாலயோகி சுவாமிகள்.

குமரகுருபரர் பிரபந்தங்களில் பசு

டாக்டர். திரு. இரா. செல்வக்கணபதி,

எம். ஏ., பி. எட்., பிஎச். டி.,

தருமபுரம்.

(தருமை ஆதீனம் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் 1988, டிசம்பர் 8, 9, 10 தேதிகளில் ஸ்ரீ காசியில் நடைபெற்ற, மூன்றாவது அனைத்துலக சைவ சித்தாந்தக் கருத்தரங்கின் இரண்டாம் நாளாகிய 9-12-88 மாலை ஸ்ரீ குமாரசாமி மடத்தில் நடைபெற்ற ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு சிறப்புக் கருத்தரங்கத்தில் படித்தளிக்கப் பெற்ற ஆராய்ச்சிக் கட்டுரை.)

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் :

தமிழ் சிற்றிலக்கிய வரலாற்றில் கி. பி. 17 ஆம் நூற்றாண்டு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இந்நூற்றாண்டில் தலைசிறந்த பெருங் கவிஞராகக் குறிக்கத்தக்கவர் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள். தமிழ் இலக்கண - இலக்கியங்களுக்கும், சைவ சமயம் மற்றும் சைவ சித்தாந்த வளர்ச்சிக்கும் சுவாமிகள் ஆற்றிய அருட்பணி சிறப்பாக ஆராயத்தக்கது. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் இயற்றிய பதினாறு நூல்களும் சைவத்திற்குச் சிறப்பாகப் பெருமை சேர்ப்பன. சுவாமிகள் அருளிய நூல்களுள் பொதிந்து கிடக்கும் சைவசித்தாந்த சாத்திர நுட்பங்கள் மிகப்பல. அவற்றுள் உயிராகிய பசு இயல்பு களாகச் சுவாமிகள் குறிக்கும் செய்திகளைத் திரட்டிப் பகுப்பாய்வு செய்யும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

சைவசித்தாந்தம் :

சைவசித்தாந்தம் சிறப்பாக விரித்துரைக்கும் பொருள்கள் மூன்று. அவை இறை (பதி) உயிர் (பசு) தளை (பாசம்) என்பன. இவற்றின் இயல்புகளைச் சைவத் திருமுறைகள் பலபட விளக்கின. கி. பி. 13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த ஸ்ரீ மெய்கண்டார் வேத சிவாகமங்களிலும், சைவத்திருமுறைகளிலும் கருக்கொண்டு வளர்ந்திருந்த சைவசித்தாந்த உண்மைகளைத் தருக்க நெறி நின்று அளவைகளால் வடிவமைத்து நிறுவினார். ஸ்ரீ மெய்கண்டாருக்கு முன்னும் பின்னுமாகத் தோன்றிய சைவசித்தாந்த சாத்திரங்கள் சிவஞான போதத்திற்கு விளக்கங்களாக அமைந்து அரண் செய்தன. சைவசித்தாந்த சாத்திரங்கள் விரிக்கும் பசுவாகிய உயிர் இலக்கணங்களை முதற்கண் சுருக்கமாக அறிமுகம் செய்து,

இவ்விலக்கணக் கூறுகள் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் பிரபந்தங்களில் பொதிந்து அமைந்த திறத்தை எடுத்துக்காட்டி இக்கட்டுரை நிறையும்.

பசு; சொற்பொருள் :

'பசு' என்ற சைவசித்தாந்த சாத்திரக் கலைச் சொல்லிற்குப் 'பாசத்தால் கட்டப்பட்டது' என்பது பொருள். தமிழில் உயிர்த் தொகுதிகளை இச்சொல் சுட்டி நிற்கிறது. அநாதியே ஆணவ மலத்தால் கட்டுண்டு கிடப்பன. உயிர்கள் என்பதால் உயிர்களைப் பசு எனத் தொகுதி ஒருமையாகக் குறிப்பர். உயிர்கள் என்றும் உள்பொருள்களுள் ஒன்றாகச் சாத்திர ஆசிரியர்களால் குறிக்கப் படுகின்றன. உயிர் இன்னது என்பது பற்றி இந்து சமயங்கள் பலவாக விளக்கம் கூறின. அவற்றை எல்லாம் ஏதுக்களால் மறுத்துச் சைவசித்தாந்தம் உயிர் இன்னது என்பதை மிகத்துல்லிய மாக விளக்கியது.

பசு; இலக்கணம் :

பாசமாகிய மலம் அறிவே இல்லாதது. அதனைச் சடம் என்பர். பதி அறிவே வடிவானது. அறியாமையால் பற்றப்படாதது; பேரறிவானது. பசு, பாசம்போல் அறிவற்ற சடமும் அன்று. பதி போல் அறிவே வடிவான பேரறிவும் அன்று. இவை இரண்டற்கும் இடைப்பட்ட சிற்றறிவாய், அறியாமையால் பற்றப்பட்டதாய் உயிர் அமைகிறது. பசு தானே அறியும் ஆற்றல் இல்லாதது என்றாலும் அறிவித்தால் அறியும் தன்மை உடையது. ஒரு காலத்தில் ஒரு பொருளையே சுட்டி அறிய வல்லது. சார்ந்ததன் வண்ணமாகத் திகழ்வது. பசு, சத்தாகிய பதியையும், அசத்தாகிய பாசத்தையும் அறியவல்லது. அதனால் இதனைச் சதசத்து என்று சித்தாந்திகள் குறிப்பர். பசு இயல்பிற்கு படிகத்தையும், கண்ணையும் உவமையாகக் கூறுவர். பசுவை சிதசித்து (இரண்டிற்கும் இடைப் பட்டது) என்றும், 'தூலசித்து' என்றும் கூறுவர்.

பசு; இயல்புகள் :

பசு தானே அறிய மாட்டாது வேறொன்றன் துணையாலேயே அறியவல்லது. அறியும் போதும் ஒவ்வொன்றாகப் படிமுறையிலேயே அறியக்கூடியது. அறிந்தே நில்லாது இடைவிட்டு, இடைவிட்டே அறியக்கூடியது. அறியப்படும் பொருளில் அழுந்தி அதுவேயாக வல்லது. இவை உயிரின் தன்னியல்பாகும். இதனைச் சொருப இலக்கணம் என்பர். மேற்கூறிய இயல்புகளால், பதிப்பொருளைச் சென்று பற்ற இயலாத பாசங்களால் உயிர் பற்றப்படத் தக்கது என்பது போதருகிறது. எனவே, பாசம் காரணமாகப் பசுவிடம்

காணப்படுவன யாவும் பசுவின்பொது இயல்பு எனப்படும். இதனைத் தடத்தலக்கணம் என்பர். மலச்சார்பால் அவத்தை வேறுபாடுகளை உயிர் அடையவல்லது.

உயிர்கள் எண்ணில :

அவத்தைகளினால் நிகழும் இன்ப துன்ப மயக்க அனுபவங்கள் உடம்புதோறும் அறிவிற்குத் தனித்தனி வேறுவேறாக அமைதலால் ஒவ்வோர் உடம்பில் உள்ள உயிரும் ஒவ்வொரு தனி முதலாகவே, கருதத்தகும். மற்றொன்றில் தொடர்புடைய தன்று. எனவே, உயிர்கள் எண்ணற்றன என்பது பெறப்படுகின்றன. உயிர் ஆணவத்தில் கட்டுண்டு கிடக்கும் நிலைபெத்தம் என்றும், விடுபட்டு இறைவனைச் சார்ந்து இன்புறும் நிலை முத்தி என்றும் பெறப்படும். உயிர் சிறுபொருளா (அணுவா) அன்றிப் பெரும் பொருளா (மகத்தா) எனச் சமயவாதிகள் பலபட ஆராய்ந்தனர். சைவ சித்தாந்தம் உயிரும் பதிப்பொருளைப்போல் வியாபகப் பொருளே, ஆணவத்தால் மறைக்கப்பட்ட நிலையில் உயிர் சிறிதாகத் தோற்றம் தருகிறது என்பர். என்றும், உயிர் இறைவனின் வியாபகத்துள் அடங்கியதாகவே கருதப்படுவது.

இருபெரும் தத்துவ நூல்கள் :

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய சிற்றிலக்கியங்களில், மேற்குறித்த உயிர் இயல்புகள் பல ஆங்காங்கே சுட்டப்பட்டுள்ளன, சைவசித்தாந்தக் கூறுகள் சுவாமிகளின் நூல்களில் பரவலாகக் காணப்படினும், கந்தர் கலிவெண்பாவினுள்ளும், பண்டாரமும்மணிக் கோவையுள்ளும் நிறைவாகக் காணப்படுகின்றன. முன்னது திருவருள் பெற்ற காலை பாடப் பெற்றது. பின்னது குருவருள் பெற்ற காலை பாடப் பெற்றது. கந்தர் கலிவெண்பாவில், முருகப் பெருமானையே சிவபெருமானாகக் கருதி, சிவபெருமானுக்குரிய இயல்புகளை முருகப் பெருமானுக்கு ஆக்கி உரைக்கும் ஒன்று முதல் முத்தாறு கண்ணிகளில் இடையே பசுவிலக்கணம் கூறப்பட்டுள்ளது.

கந்தர்கலிவெண்பாவில் பசு :

பசுக்களாகிய ஆன்மாக்கள் அநாதியாகவே ஆணவமலமாகிய பாசத்தால் கட்டுண்டுகிடப்பன. அவை பல்வகைத் தோற்றத்தன, எழுவகைப் பிறவியுள் 84 லட்சம் உடல் வகைகளில் பிறந்துவருவன. உயிர்கள் தாம இயற்றும் நல்வினைப் பயத்தால் இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்தி நிபாதம் பெற்று, இறைவனே குருவாகி எழுந்தருளி வர அவனருளால், பசுகரணம் நீங்கிப் பதிகரணம் பெற்று விளங்கவல்லது. சிவன ஒருமலத்தோடு கூடிய விஞ்ஞான கலருக்கு

அகக்கண்ணில் கோலங்காட்டி அருள்புரிவன்; இருமலமுடைய பிரளயாகலருக்கு புறத்தே இடபவாகனராகக் காட்சி கொடுத்து அருள் செய்வான், என்றெல்லாம் பசு இயல்புகளும் அவை அருள் பெறும் முறையும் கந்தர்கலிவெண்பாவில் விளக்கப்பட்டுள்ளன.

சில் அகச்சான்றுகள் :

உயிர் அநாதியே ஆணவ மலத்துள் கட்டுண்டு கிடத்தலை "இருள்மலத்துள் மோகமுறும் பல்லுயிர்" எனக் குறித்துக்காட்டுகிறார். பழவினைகளுக்கு ஈடாக உயிர்களுக்குப் பிறவி அமைவதை,

> " தீர்வரிய
> கன்மத்துக் கீடாய்க் கறங்கும் சகடமும்போல்
> சென்மித்து "

என விளக்குவர் உயிர்கள் பக்குவப்பட்ட காலை ஆணவம் அகற்றி, மெய்ஞ்ஞானம் காட்டும் இறைவன் இயல்பை

> " திருநோக்கால்
> ஊழ்வினையைப் போக்கி உடல்அறுபத் தெட்டுநிலம்
> ஏழுமத்து வாக்கள் இருமூன்றும் – பாழாக
> ஆணவ மான படலங் கிழித்து அறிவில்
> காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டி "

என விளக்கியருள்வார். கந்தர்கலி வெண்பாவின் இப்பகுதியில் பசு இயல்பும், அவை இறையருளால் வினை நீக்கம் பெற்று இறைவன் அடியில் இணையும் திறமும் முறையாக விளக்கப் பட்டுள்ளன.

பண்டார மும்மணிக்கோவை :

தருமை ஆதீனம் நாலாவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகரிடம் ஞானோபதேசம் பெற்ற ஸ்ரீ குமர குருபரசுவாமிகள், ஆசாரிய துதியாக அருளிய அரிய சைவசித்தாந்த சாத்திர நுட்பம் நிறைந்த நூல் பண்டார மும்மணிக்கோவை.

> " அந்நிய மென்றும் அநநியம் என்றும்
> இந்நிலை இரண்டும் எய்திற் றென்றும்
> பல்வே றுரைக்குநர் சொல்வழிப் படாது
> திவ்வியம் பழுத்த சைவசித் தாந்தத்து
> இறவா நிலைமைபெற் றின்பமார்ந் திருக்கும்
> பிறவா நன்னெறி பெற ...... "

ஆசாரியரிடம் வேண்டும் சுவாமிகள் பசிவு செய்து காட்டும் பசு இலக்கணக் கூறுகள் பல. ஒருசில இடங்கள் மட்டுமே எடுத்துக் காட்டப்படுகின்றன.

பதியும்; பசுவும் ஒப்புமை :

பொருள் இயல்பால் பதிப்பொருளும், உயிர்களும் வெவ்வேறான இலக்கணம் உடையன. ஒருவகையான் ஒத்தும் ஒருவகையான் ஒவ்வாதும் அமையும் பதி, பசு இலக்கணங்களுள், ஒப்புமைக் கூறுகளை நயம்பட சுவாமிகள் விரித்துரைக்கும் பகுதி பண்டார மும்மணிக்கோவை எட்டாம் பாடலின் முதல் பதினொரு அடிகளில் அமைகிறது.

“ஒன்றே தன்மை உனக்கும் மற்றெமக்கும்
அன்றென மொழியினும் ஆம்எனப் படுமே
அங்ஙனம் கூறியது எங்ஙனம் பிறவெனில்
என்றொன்று உளை உனம் அன்றொன்று யாமே!
அழியா நிலைமையை: அனையம் யாமே!
வியாபகம் நினக்குளிது: யாமும் அஃது உளமே!
அறிவெனப் பெயரின் பெயரினை அப்பெயர்
பிரிவரும் பெயராய்ப் பெற்றனம் யாமே
இச்சா ஞானக் கிரியைஎன் றிசைக்கும்
சத்திகள் உளை; உளதத்திறம் எமக்கே!
இந்நிலை முழுவதும் எமக்குமுண் டாகளில்
அந்நியம் அல நினக்கு அநநியம் யாமே”

முற்பகுதியில் எடுத்துகாட்டப்பட்ட பசு இலக்கணக் கூறுகள் பலவும் சமத்காரமாக இங்கே எடுத்துக்காட்டப்பட்டுள்ள திறம் போற்றி மகிழச்செய்வது, பதிப்பொருள்போலப் பசுக்களும் என்றும் உள்பொருள். பதிப்பொருளும் அழிவதில்லை. உயிர்களும் அழிவதில்லை. இரண்டும் வியாபகப் பொருள்களே. பதி அறிவுப் பொருள். பசுவோ அறிவித்தால் அறியவல்லது. இச்சை முதலியன இறை சத்திகள். உயிர்களுக்கோ அவை செயல்களாகத் குறிக்கப்படுவன.

நிறைவுரை :

இங்ஙனம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் பிரபந்தங்களில் ஆங்காங்கே காணப்படும் பசு இலக்கணக் கூறுகள் சில உண்டு. பதிப்பொருள் இலக்கணம் விரிவாகக் காணப்படுகின்றது. வினைக் கூறுகளும், அவற்றின் இயல்புகளும் நிறைவாக விளக்கம் பெற்றுள்ளன. பசு இலக்கணக் கூறுகள் குறைவே. சிறப்பான விளக்கங்கள் ஒருசில மட்டுமே இங்கே எடுத்துக்காட்டப் பெற்றன. விரிவான ஆய்வுகளுக்கு இஃதோர் முன்னோடி முயற்சியாக அமையும்.

மேலை நாட்டுத் தத்துவ மேதைகள்

(Western Philosophers)

சுவாமி வீரபாகு

3. அரிஸ்டாட்டில் (Aristotle) - தொடர்ச்சி (9)

(கி. மு. 384-322)

(மலர் 48, இதழ் 2, பக்கம் 97 இன் தொடர்ச்சி.)

ஆட்சியும் அதன் நோக்கமும் :

எவ்வகையிலேனும் ஏதேனும் ஓர் ஆட்சிமுறை எல்லா நாடுகளிலும் அமைந்திருக்கக் காண்கிறோம். காட்டுமிராண்டிக் கூட்டமே என்றாலும் கூட, கட்டுக்குக் கொண்டு வர ஓர் ஆதிக்கம் கொண்ட தலைவன் அவசியம் இருப்பான். தலைவன் ஒருவன் தக்கபடி இல்லாத நாடு, அலைகடல் போல அமைதியின்றிக் குழப்பத்தில் ஆழும். இதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

அப்படியானால் ஆட்சி அமைப்பின் நோக்கம் தான் யாது? அரிஸ்டாட்டில் கூறுகிறார். "ஆட்சி அமைப்பின் நோக்கம், ஆளப்படும் மக்களின் நல்வாழ்வுக்கு உத்தரவாதமாக நிற்பதே ஆகும்" எனவே இக் கூற்றின் படி அரசியல் சாத்திரம் தானே நீதி சாத்திரமாக (Ethics) உருவெடுக்கிறது - இதன் பொருள் அரசியல் என்பது நீதிமுறையின் அடிப்படையிலே அமையவேண்டும் என்பதே ஆகும். அரசு என்பது ஆளப்படும் மனிதனுக்காகவே அன்றி மனிதன் அரசுக்காக அல்ல. (The state exists for man and not man for the state) மனிதன் பிறந்தது எதற்காகத் தெரியுமா? சுகத்தோடு, - மகிழ்ச்சியோடு வாழ்வது ஒன்று தான் மனிதப் பிறவியின் நோக்கம் ஆகும். (Man is born for only one purpose - to be happy) என்கிறார் அரிஸ்டாட்டில்.

மகிழ்ச்சிகரம் என்றால் என்ன?

மகிழ்ச்சிகரம் என்றால் என்ன என்பதை மாமேதை அரிஸ்டாட்டில் புதுமையாக விளக்குகிறார் வழக்கமாக நற்செயல்கள் (Good deed) செய்வதன் மூலம், நல்ல மனமகிழ்ச்சி நிலை நாளும் எய்தப்படுகிறது. தன்மகிழ்வுக்கு ஆதாரம்,

அடிப்படை, அனுசரிப்பு எல்லாமே நற்செயல்கள் தான் என்பது அரிஸ்டாட்டிலின் அசைக்க முடியாத அறநெறி (It is the pleasant state of mind which is brought about by good deeds) அத்தகைய மகிழ்ச்சி நிலை நல்லதால் மட்டும் எய்தப்படுவது அன்று. ஒருவன் திருவருள் துணையால் போதிய அளவு நன்மைகள் ஏற்கனவே அடையப் பெற்றிருக்க வேண்டும் - அதாவது நல்ல குலம், நேர் கொண்ட பார்வைகள், நல்ல ஊழ் மற்றும் நல்ல நண்பர்கள் இவற்றாலே நன்னிலை அடையப் பெறுகிறது. இவற்றிற்கு மேலாக, மகிழ்ச்சி நிலை அடையப் பெற நீண்ட ஆரோக்கியமானதொரு வாழ்வும் அமையப் பெறல் வேண்டும். வாழ்வினை ஒருபூரண வசந்தகாலமாக வரப்பெறற்கு நெடுங்காலம் தேவை. அதில் போதிய ஒளிச்சுடரும் (A sufficiency of sunlight) பூரண இசை அளவும் அங்கே, அதிலே, வாழ்விலே திகழவேண்டு மென அரிஸ்டாட்டில் அறிவிக்கிறார். அஃது ஒருவரிடம் அமைந்தால் மட்டும் போதாது. அது சமுதாயத்திலே சால்பாக மலர்ந்து மிளிர வேண்டுவது அவசியமும் அடிப்படையும், ஆதாரமும் ஆகும். தனிமரம் தோப்பாகாது. இத்தன்மை ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் மலர்ந்தால் போதாது. என்றும் புலராது அஃது அமைந்திருக்க வேண்டும். ("One swallow does not make a summer, nor does one day")

சீரியோர் என்றும் சிறப்பாய் வாழ்வர் :

குறுகிய கால வாழ்வு என்றும் சரி, கொந்தளித்துப் பொங்கும் துயர் நிலை நடுவே வாழும் வாழவே ஆயினும் சரி, சீரியோர் அவற்றிற்கிடையேயும் ஆனந்தமாக இருக்கஇயலும். (வறுமையிற் செம்மை என்ற வாக்கொடு ஒப்பு நோக்குக) சீரியே ஆன்மாக்கள், துன்பம் எய்தப் பெறும் காலத்திலும் புலன்வலிமையால் அதனைத் தாங்கவும், எதிர் நின்று ஏற்கவும் வல்ல பழக்கத்தை வர வழைத்துக் கொள்வது முற்றிலும் சாத்தியமே. அஃது ஓர் அரிய வரப்பிரசாதமாக அமையக் கூடிய ஒன்றாகும். இதை வேறு வகை யிலும் கூறலாம் என்கிறார் அறிஞர் அரிஸ்டாட்டில். சில வேளை களில் நாம் அதனைத் துறப்பதன் மூலம் ஆனந்தம் எய்த வாய்ப் புண்டு (We may sometines attain happiness through renouncing it) இவ்வரியகருத்தை வள்ளுவர் வாக்கோடு ஒப்பிட்டுப்பார்த்தல் பலன் தரக்கூடியதாகும்.

" யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன் " (குறள் - 341)

என ஓர் அரிய தத்துவத்தைத் திருக்குறள் இதன் மூலம் திருத்த முறப்புகாட்டுகிறது. இத்தகைய நற்பண்போடு ஒருவன் நடந்து

கொண்டால், ஒரு மனிதனுக்கும் துன்புறுகிறேன் என்று எண்ண நேராது - பகைப்புற்றுப்பாடுறவும் வாராது. அத்தகைய மனிதர் எவரும் மற்றவர் பால் தீய முறையிலேயும் கீழ்மை நிலையிலேயும் ஏதும் இயற்ற மாட்டார்கள். ஏற்கனவே குறிப்பிட்டவாறு, மகிழ்ச்சி என்பது பிறருக்கு நற்செயல்கள் புரிவதிலே அடங்கியுள்ளது. இங்கும் ஓர் அரிய குறள் நினைவு கூரத்தக்கது.

"நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். (குறள் - 320)

நற்பண்பு என்பது நவில்வது என்ன?

நற்பண்பின் பயனாகத்தான் இன்பம் - மகிழ்வு அமைகிறது என்றால், நற்பண்பு என்ற சொல் நவில்வதுதான் யாது? முற்காலத்தில் நற்பண்பு என்ற சொல், நீதி வழி நேரும் நீர்மை (Moral excellence) என்பது ஒன்றையே குறித்து நின்றது. அஃதே எவ்வித நீர்மையையும் (Excellence) கூறுவதாக வழக்காற்றில் இருந்து வந்தது. நற்பண்பு என்ற சொல் ஏதென்ஸ் அரசிலே (Athenian state) நற்பண்பு மிக்க, ஓர் ஆற்றல் மிக்க வீரனையும் குறித்து நின்றது. நற்பண்பு (Virtue) என்ற பதம் பழங்காலக் கிரேக்க மொழியிலே "ஏரீட்" (Arete) என்ற சொல்லின் பொருளாக அமைந்திருந்தது 'Arete' என்ற சொல் அக்காலத்திலே போர்க் கடவுளின் (Ares) பெயராக இலத்தீன் மொழியிலே அமைந்து நின்றது. (கிரேக்க மொழி = Arete; இலத்தீன் மொழி = Vritus; ஆங்கிலம் = Virtue) இப்பதங்கள் யாவும் மனிதத் தன்மையாகிய பண்பையே குறிப்பன என்று கூறலாம். ஒரு நற்பண்புமிக்க மனிதன் என்றால், அரிஸ்டாட்டில் கூறும் அர்த்தப்படி, உடல் கொண்ட உரமும், நுட்பக்கலைத் தகுதியும் (Technical competence) மனோதர்மப் பண்புடைமையும் (Mental virtuosity) ஆகிய இவை எல்லாம் வாய்க்கப் பெற்ற மனிதனையே குறிப்பிடுவதாகும். இவற்றோடு அரிஸ்டாட்டில் நான்காம் ஒன்றையும் கூட்டி நவில்கிறார். அது தான் "நீதிநெறிச்சீர்மை" (Moral nobility) அரிஸ்டாட்டில் கூறும் ஓர் "இன்புடைய வீரனுக்கு" ("Happy warrior") வாழ்க்கையாகிய போராட்டத்தில் ஈடுபடும் அவனுக்கு - அனைத்து வழி நீர்மையும் - அமைய வேண்டுவது அவசியம் என்கிறார் அரிஸ்டாட்டில்.

"பொன்னான மார்க்கக்" கோட்பாடு :

அறிஞர் அரிஸ்டாட்டில் "பொன்னான மார்க்கம்" என்ற கோட்பாட்டிலே, பல திறப்பட்ட நீர்மைப் பண்புகளைத்

தொகுத்துச் சுருக்கித் தொகுத்து இயம்புகிறார். இன்பம் கொண்ட மனிதன், நற்பண்புகள் கொண்ட நாயகன் (Golden mean) யார்தெரியுமா? எவன் "பொன்னுனமார்க்கத்தில்" போகின்றவன். எவன் ஒருவன் இரண்டு நீர்மையற்ற நடத்தைக் கோடிகட்கு இடையில் ஒழுகி வாழ்கிருனே அவனே அந்த அற்புத மனிதன். (The happy man, the virtuous man, is he who preserves the "golden mean" between two ignoble conduct) என்கிறார் அரிஸ்ட்டாட்டில் என்ற அரசியல் தத்துவ மாமேதை. சிறப்பற்ற (ignoble) இருநடத்தைகட்கு (conduct) இடை நிலையைமேற்கொள்வதே "பொன்னுனமார்க்க" மாகும். அவை இரண்டுமே வாழ்க்கையை வழுப்படுத்தக் கூடியதாக இருக்கும். அவற்றின் இடைநிலையைத் தேர்ந்தெடுப்பதே இசைமிக்க வாழ்வாக இருக்கும். மற்றவர்களோடு இங்ஙனம் இதனைப் பகிர்ந்து கொள்ளவேண்டும். ஊதாரித்தனம் (extravagances) என்பது அதிகப்பட்சமான ஒன்று (Overdoing). அதேபோலக் கருமித்தனம் (Stingy) என்பதும் அதிகபட்சமானதுதான். இவற்றிற்கு இடைநிலைகண்டு ஒழுகுவதே 'பொன்னுன மார்க்கம்'. வெறித்தனம் (Foolhardiness) என்பதும் கோழைத்தனம் (Cowardise) என்பதும் அதிகபட்சமானவை. இவற்றின் இடை நிலையை ஏற்று இனிது ஒழுகவேண்டுவது பொன்னுன மார்க்கம் ஆகும். வெறித்தனத்திற்கும் கோழைத்தனத்திற்கும் இடைப் பட்டது தைரியம் (Brave) இதை ஏற்க வேண்டுவது நன்முறை - பொன்னுனமுறை. உண்ணும் விஷயத்தை எடுத்துக்கொள்வோம். கழிபேருண்டி(Gluttonous)கொள்வதும் மிகக்குறைவாகஉண்பதும் இருதுருவங்கள் இவற்றிற்கு இடைப்பட்ட மார்க்கம் - அளவாக (Moderate) உண்பது ஆகும். இங்ஙனம் "பொன்னுன மார்க்கத்தை" பொருள்பட விளக்குகிறார் அரிஸ்டாட்டில். இரு வேறுபட்ட - அல்லது இருமுனையில் நிற்கும் இரண்டில் இடைப் பட்ட மார்க்கமே பொன்னுன மார்க்கம் எனப் பொருத்தமுற விளக்குகிறார் அரிஸ்டாட்டில். ஒவ்வொரு விஷயத்திலும், வாழ்வில் அறிவுபூர்வமான அந்த வழியின்படி ஒன்றை மிகக் குறைவாக நிகழ்த்துவதும் அல்லது அத்துமீறிச் செய்தலும் அறிவுமிக்க தாகாது - பகுத்தறிவு நெறியாகாது. இடைப்பட்ட நிலையில் அதனை இயற்றுவதே (To adopt the middle course)சீரிய நெறி யாகும். அம்முறையையே பலஉதாரணங்கள் தந்து அரிஸ்டாட்டில் தம் "பொன்னுன மார்க்கத்தைப்" போதிக்கிறார். நற்பண்புள்ள மனிதன் என்பவன் அதீத நிலைகொண்டவனுகவோ அன்றிக் கீழ் நிலை கொண்டவனுகவோ இருக்கமாட்டான். நியாயமான நிலையிலே - அறிவுபூர்வமான நிலையிலேதான் இருப்பான் (Justly and wisely normal) "அவன் சரியான நேரங்களில்

சரியான விஷயங்கள் சம்பந்தப்பட்டவற்றில், சரியான மக்களிடம் சரியான நோக்கத்துடன், சரியான மார்க்கத்தில் ஒழுகுவான்" "He will act" at the right times, with reference to the right objects towards the right people, with the right motive and in the right way. சுருங்கக் கூறி விளங்கவைக்க வேண்டுமெனில், அவன் எல்லாச் சமயத்திலும், எல்லாச் சூழ்நிலையிலும், அவன் பொன்னுனமார்க்கத்தைப் போற்றி ஒழுகுபவனுக இருப்பான். ஏனெனில் பொன்னுனமார்க்கம்தான் மகிழ்ச்சிகரமான வாழ்விற்கு மகத்துவமான ராஜபாட்டை ஆகும். (For the golden means is the royal road to happiness.)

இலட்சிய மனிதனின் இலக்கணங்கள் :

பொன்னுனமார்க்கத்தைப் போதித்தலின் அரிஸ்டாட்டில் ஓர் இலட்சிய மனிதனின் (ideal man) இயல்புகளை எடுத்து இயம்புகிருர். இன்ப வாழ்வுக்கு வழிகாட்டிய பின் அரிஸ்டாட்டில் அவ்வின்ப வாழ்வுக்கு அருகதையானவனைப் பற்றிக் கூறுகிருர்.

ஓர் அருமையான கனவான் – பண்பாளன் யார் என எடுத்துத் தொடுத்துக் காட்டுகிருர். அரிஸ்டாட்டில் காட்டும் கனவான் தன்னை அவசியமின்றி ஆபத்தில்சிக்க வைத்துக்கொள்ளமாட்டான். சமயம் வந்து விட்டால் சந்தர்ப்பத்தில் தன் ஆருயிரையும் அர்ப்பணிக்கச் சித்தமாக இருப்பான். மற்றவருக்கு உதவுவதில் இந்த இலட்சிய மனிதனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படும். ஆனுல் அவன் பிறரிடமிருந்து ஓர் உதவிபெறுவதை ஓர் அவமானகரமான செயலாக அதனை எண்ணி வருந்துவான். அன்புச் செயல் செய்வது மேன்மை நிலையின் அடையாளம் ஆகும். ஆனுல் ஏற்பது இகழ்ச்சி என்பதை அவன் இனிது உணர்ந்திருப்பான். ("He takes joy in doing favours to other men, but he feels shame in having favours done to him by other men, for it is a mark of superiority to confer kindness, but inferiority to receive it") இலட்சிய மனிதன் சுய நல உணர்வு இல்லாதவன். ஒருவருக்கு உதவுவது சுய - தியாகம் (Self - Sacrifice) என்பதல்ல; அஃது அவனுக்கு சுய பாதுகாப்பு ஆகும். ஒரு மனிதன் ஒரு தனி நிலை கொண்டவன் அல்ல; அவன்சமுதாய கூட்டுநிலையைச் சார்ந்தவன். ஒவ்வொரு நற்செயலும் ஆதாயம் தரவல்ல முதலீடு ஆகும். (Profitable investment) அஃது உடனேயோ அல்லது காலக்கிரமத்திலேயே திரும்பி வட்டியும் முதலுமாக அவன்பால் வந்து சேரவல்லதாகும். எனவே ஓர் இலட்சிய மனிதன் என்பவன் தயாமூலமாக நிற்பவனுவன். ஏனெனில் அவன் நல்லறிவுகொண்டவன்.

அவன் பிறரைப் பற்றி அவதூறு பேசமாட்டான். அவன் பகைவருக்கும் அருள் செய்யும் பண்பாளன். ஒருவேளை அவன் தருணத்தில்தானே வளைந்து கொடுத்துத் துயரத்தை வாங்கிக் கொள்ளுவான். அவன் கொடுமையைக்கண்டு அஞ்சான். தனக்குப் பிறரால்ஏற்படும் மனப்புண்களை அப்பொழுதே-அவ்விளுடியிலேயே மறந்துவிடுவான். (நன்றல்லது அன்றேமறப்பதுநன்று-திருக்குறள்) சுருங்கக் கூறின் அவன் எவருக்கும் அன்பு நண்பன்; ஏனெனில் அவன் தனக்குத் தானே சிறந்த நண்பனுய் நண்ணுபவன். ("In short, he is a good friend to others because he is his own best friend")

இங்ஙனம் அரிஸ்டாட்டில் இனிமை பொருந்திய இலட்சிய மனிதனின் ஈடற்ற பண்பை - இலக்கணத்தை இலாவகமாக எடுத்தோதுகிருர்.

ஆதார நூல்கள்

Basic Teachings of Great Philosophers by S. E. Frost
Living Biographies of Great Philosophers by Thomos & Thomos
Philosophy Made Simple by Richard H. Popkin and Avrom Strole
Get to know Philosophy by Hugh Harris.
Student's History of Philosophy by Arthur Kenyon Rogers.
A History of Philosophy by Frank Thilly.

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthakadeswarar Devasthanam, Thirukkadavoor

I had the fortune to pay my obeisance to the lord and the consort. It had been a satisfying experience-a life's ambition fulfilled.

The temple is well maintained. The manager Sri Gnanaprakasam gave us all the assistance and this had made the தரிசனம் a memorable one. It is Abirami's blessings and benedictions.

(S-d) S. Ramaiah,
Secy to Govt of India.

கழறிற்றறிவார்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ., பி.எட்.,

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 1—1—1989 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

1989 பிறந்தது! முதல் ஞாயிறும் கூடிற்று! ஆங்கில ஆண்டின் முதல் நாளில் திருக்கோயில் வழிபாடு ஆற்றவும் ஸ்ரீலஸ்ரீ குருமணிகளைத் தரிசிக்கவும் அன்பர்கள் திருமடத்தில் குழுமியிருந்தனர்.

ஆண்டின் தொடக்க நாளாதலால் - அதுவும் மார்கழி மாதமாகவும் இருந்தது—தருமைக் குருமணிகள் திருக்கடவூர்வீரட்டத்துப் பெருமானை வழிபட்டுத் திருமடத்திற்கு எழுந்தருளியிருந்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் சித்திராசனத்தில் எழுந்தருளியிருக்க அன்பர்கள வழிபட்டுத் திருநீற்றுப் பிரசாதம் பெற்று அணிந்து அமர்ந்தார்கள். பாராயணம் தொடங்கிற்று. அடுத்து, குருமணிகள் குருதோத்திரம் செய்து கொண்டு, மாதச் சிறப்பு நாட்கள் பற்றி அருளி உபதேசம் தொடங்கினார்கள்.

கழறிற்றறிவார் நாயனார் புராணம் அன்றைய உபதேசம்! முந்தைய உபதேசத்தில் நாகைக்காரோணத்து நாதரை வணங்கிப் பாடிய சுந்தரர் அழகிய பொன்மணி ஆபரணங்கள் நவமணிகள், ஆடை, கலவைச்சாந்து குதிரைகள், பொற்சுரிகை முதலான வற்றைப் பெற்று; திருவாரூரில் எழுந்தருளி இருந்தார். தில்லை நடராசரைத் தொழுது ஆரூர் அடைந்து பணிந்த சேரமானார்க்குத் தம்மைத்தோழமை தந்தருளினார் சுந்தரர். பிறகு இருவரும் ஆரூரில் தங்கியிருந்தனர்-என்பதுவரை நிறைவித்தார்கள். இவ்வுபதேசத்தில் ஆரூரிலிருந்து தலயாத்தரையாகப் புறப்பட்டு மதுரையை அடைந்து திருப்பரங்குன்றம் வழிபட்டு திருஇராமேச்சரம் அடைந்தமை வரை சுருக்கமாக அருளினார்கள்.

சுந்தரரும் சேரமானாரும் ஆரூர்ப்பெருமானை வணங்கி அருவி விடைகொண்டனர். திருக்கீழ்வேளூர் கேடிலியப்பரை வழிபட்டனர்.

நாகைப்பட்டினம் அடைந்து திருநாகைக்காரோணம் பணிந்தனர். சுந்தரர் சிந்தையினை உருக்கும் செந்தமிழ் மாலை சாத்தினர். இருவரும் சில நாட்கள் அங்குத் தங்கி இருந்தனர். அங்கிருந்து இருவரும் முந்நீர் வலங்கொண்டிறைஞ்சும் திருமறைக்காடு சார்ந்தனர். அப்பரும் சம்பந்தரும் திறக்கவும் அடைக்கவும் பாடிய திருவாயிலை அடைந்து, வணங்கினர். அப்பெரியார்களை மனத்தில் நினைத்துத் தியானித்தனர்; வணங்கினர். சுந்தரர், 'யாழைப் பழித்தன்ன' எனத் தொடங்கும் பதிகம்பாடி இறைவனைத் தொழுதார். சேரமானர் பொன்வண்ணத்தந்தாதியில் தாம்பாடிய பாடல்களையே ஓதி வழிபட்டார். சிலநாள் அங்குத் தங்கியிருந்தனர். அங்கிருந்தவாறே அகத்தியான்பள்ளி சென்று கோடிக் குழகர் கோயில் சார்ந்தனர். கோடிக்குழகர் திருக்கோயிலின் அயற்புறங்களில் மக்கள் எவரும் குடியிராமையை நினைந்து சுந்தரர் உள்ளம் வாடினர். "கடிதாய்க் கடற்காற்று" எனத் தொடங்கி மலர்க் கண்ணீர்வாரத் தொழுது பாடினர். அப்பதிகத்தில் காடுகாளுடன் இறைவன் வீற்றிருக்கும் தன்மையை வைத்துப் போற்றினர் எனச் சேக்கிழார் குறிக்கிருர். காடுகாள் - காடுகிழாள். காளி என்றும் வனதுர்க்கை என்றும் கூறுவர்.

"கையார் வளைக் காடுகாளோடும் உடனாய்க்
கொய்யார் பொழில் கோடியே கோயில் கொண்டாயே"

என்பது அப்பதிகப் பகுதி. (7-32-5) மேலும் இப்பதிகத்தில்,

"குடிதான் அயலே இருந்தால் குற்றமாமோ?"

என்றும்,

"அடிகேள் உமக்கு ஆர்துணையா இருந்தீ ?"

என்றும், குடிகள் இன்றித்தனிமையாயிருந்தமைபற்றி இரங்கிப் பாடிய சுந்தரர் திருவுளக்குறிப்பை அகச்சான்றுகளுடன் விளக்கியருளியமை மனங்கொள அமைந்தது.

திருவகத்தியான்பள்ளித் திருக்கோடிக்குழகரைத் தரிசித்துத் திருமறைக்காடு மீண்டனர். ஆரூரிலிருந்து புறப்பட்டபோதே மதுரை சென்று வணங்கத் திருவருள் நினைப்பு இருந்தது. திருமறைக்காடு தொழுதவுடன் சுந்தரருக்கு மதுரை செல்லும் உளக் குறிப்பு வலிமை பெற்றிருத்தல் கூடும். திருஞானசம்பந்தரைக் கன்னிநாட்டுக்கு வருமாறு மங்கையர்க்கரசியார் பரிசனங்களை அனுப்பி அழைப்பித்தமை திருமறைக்காட்டில் நிகழ்ந்ததன்றோ!

ஞானசம்பந்தர் நினைவு மீதூரப் பெற்ற சுந்தரர் அங்கிருந்து மதுரை செல்ல விரும்பினர். சேரமானுக்கும் இது போலவே மற்றோர் திருவருள் உணர்வு! இவ்வுணர்வு ஆரூரிலிருந்து புறப்பட்டபோதே முகிழ்த்தது! 'மதிமலிபுரிசை' என்று தொடங்கிப் பாணபத்திரருக்கு மாணபொருள் கொடுத்து வரவிடுக்குமாறு ஆலவாய் அண்ணல் தமக்கு அளித்தருளிய திருமுகப் பாசுரம் தந்த உந்தல்!-மதுரைப் பெருமானைத் தரிசிக்கவேண்டும் என்ற உணர்வு வலுப்பெற்றது - இங்ஙனம் சுந்தரரும் சேரமானும் மதுரைப் பெருமானை வழிபடும் எண்ணம் மிக்குத் தரிசிக்க சென்றமைக்கான காரணங்களை - சீரிய சிந்தனையாக - வழங்கி உளங்கொள்வித்தார்கள்.

இருவரும் மறைக்காடரை வணங்கி விடைகொண்டனர். சோழநாட்டுத் திருப்பதிகளை வணங்கினர். பாண்டியநாடு அடைந்தனர். திருப்புத்தூர் அடைந்து வழிபட்டனர். ஆசாரியனும் அரசனுமாகத் தலயாத்திரை செய்து மதுரையை அடைந்தனர். பாண்டிய மன்னன் எதிர்கொண்டு வரவேற்றான். திருநகர் அலங்கரிக்கப்பெற்றிருந்தது. பாண்டிய மன்னன் மகளை மணம் புரிந்து, முன்பே அங்குத் தங்கியிருந்த சோழனும் - ஆக, சேர, சோழ, பாண்டியரும் ஆசாரியருமாகத் திருஆலவாய்ப் பெருமானை வழிபட்டனர். சுந்தரர் திருப்பதிகம்பாடினர். சேரமான் "அடியேனைப் பொருளாக அளித்த திருமுகக் கருணை முடிவு ஏதென்று அறிந்திலேன்" என மொழிகள் தடுமாறித் துதித்தார். சேரமானையும் சுந்தரரையும் தம் திருமாளிகைக்கு அழைத்துச்சென்று பாண்டியன் உபசரித்தான்.

பின்னர் முடிமன்னர் மூவருடன் திருப்பூவணம் செல்லலுற்றார். அடியார்கள் அத்திருப்பதியினைக் காட்டினர். சுந்தரர் "திருவுடையார்" எனத் தொடங்கிப் "பூவணம் ஈதோ" என்ற திருப்பதிகம் பாடியவாறே சென்று திருக்கோயில் சார்ந்தார். மீண்டும் மன்னர் மூவர் உடன்வர மதுரைசார்ந்தார். அங்கிருந்தவாறே ஆப்பனூர் திருஏடகம் சென்று தொழுதுபாடினர். மீண்டும் மதுரை போந்தார். மீண்டும் மூவேந்தரோடு திருப்பரங்குன்றம் நண்ணினர். சிவபெருமான் திருவடிக் கீழ் இருந்து ஆட்செய்யும் அருமையை நினைத்தார். "அடிகேள்! உமக்கு ஆட்செய அஞ்சுதுமே" என்னும் நிறைவு கொண்ட "கோத்திட்டையும் கோவலும் கோயில் கொண்டீர்" எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடினர். இப்பதிகத் திருக்கடைக்காப்பில்,

" அடிகேள் உமக்கு ஆட்செய்ய அஞ்சுதும் என்று
அமரர் பெருமானை ஆரூரன் அஞ்சி
முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே
மொழிந்த "

என்று அமைந்த பகுதியினைக் குருமணிகள் சுட்டி விளக்கினார்கள். மதுரையிலிருந்து பல திருத்தலங்களையும் மூவேந்தருடன் சென்று வழிபட்டபோதிலும் சுந்தரர் திருப்பரங்குன்றப் பதிகத்தில்தான் மூவேந்தர்பற்றிப் பதிவு செய்துள்ளார் எனப் புலப்படுத்தியருளினார்கள்.

மேலும் பாண்டிய நாட்டுத் தலங்கள் சிலவற்றை வழிபட எண்ணிச் சேரமானுடன், சுந்தரரும் எழுந்தருளினர். சோழர், பாண்டியர் இருவரும் சேரமானுக்கும், சுந்தரருக்கும் வேண்டுவன செய்தற்குரிய பரிசனங்களை அனுப்பி மதுரைக்கு மீண்டனர். சேரமானும் சுந்தரரும் திருக்குற்றாலம் சென்று குறும்பலா ஈசரைப் போற்றித் தொழுதனர். பல பதிகளையும் வணங்கிக்கொண்டு திருநெல்வேலி சார்ந்தனர். திருநீற்று அழகாரம் இறைவனைப் பணிந்தனர். அங்கிருந்து பதி பல வணங்கி, திருஇராமேச்சரம் அடைந்தனர். சுந்தரர் பதிகம்பாடித்தொழுதார். அங்கிருந்தபடியே ஈழநாட்டுத் தலமாகிய திருக்கேதீச்சரத்தினை மனத்தால் நினைந்து சொன்மாலை பாடித் தொழுதார். பின் திருச்சுழியல், கானப்பேரூர் முதலிய தலங்களை வழிபட்டார் - இராமேச்சரம் தொழுதமை முதலிய இப்பகுதிகளைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, அடுத்த அருளுபதேசத்தில் பதிகக் குறிப்புக்களுடன் விளக்க இருத்தலை அருளி இனிய அருளுபதேசத்தை நிறைவித்தார்கள்.

குளிர்காலம் ஆகையால் இன்சுவைத் தேநீர் அன்பர்கள் பண்டாரக்கட்டினிலிருந்து வெளியே வந்ததும் வழங்கப் பெற்றது; பருகி மகிழ்ந்தோம்; இனிய நினைவுகளோடு இல்லம் ஏகினோம்.

" சுந்தரரின் செந்தமிழைச் சுவைத்துப அருள்செய்யும்
எந்தையருட் குருமணிகள் இணையடியைத் தொழுதிடுவோம் "

வாழ்க குருமணிகள்!

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலயவழிபாடு

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலயவழிபாடு விபவ ஆண்டு தை மாதம் 10 (23—1—89) திங்கட்கிழமையன்று கூழையூர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற்றது. இத்தலம் அப்பர் சுவாமிகள் அருளிய திருத்தாண்டகப் பதிகத்தில் இடம் பெற்ற வைப்புத்தலமாகும். தலச்சிறப்புக்களை விளக்கித் தருமை ஆதீனப் புலவர், வித்துவான் திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம். ஏ., அவர்கள் உரையாற்றினர். பக்தர்கள் விழாவில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கில மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமைதோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைக் கூட்டம் நிகழ்ந்து வருகின்றது. இம்மாதம் 92 ஆம் அருளுபதேசம் 5—2—89 அன்று திருமுறைப் பாராயணத்துடன் சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் கழறிற்றறிவார் நாயனர் புராணம் உபதேசிக்கின்றார்கள். சுந்தரரும், சேரமானும் திரு இராமேச்சரம் தரிசித்தமை முதலாக, சுந்தரர் திருவாரூர் அடைந்தமை வரை அன்றைய உபதேசம் சுந்தரர் திருமுருகன் பூண்டியில் பாடிய 'கொடுகு வெஞ்சிலை' என்ற பதிகம் இறைவனிடம் இரக்கவுணர்வு தோன்றப் பாடியது என்று அருளிச் செய்தமை புதிய சிந்தனையாக அமைந்தது. இப்பதிகத்தின் சிறப்பு இழந்த பொருளை மீட்டும் எய்தப் பெறுதல் ஆகும்.

தருமை ஆதீன அடியார்கள், அலுவலர்கள், அன்பர்கள், ஆசிரியர்கள் முதலியோர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். அடுத்து 93 ஆம் அருளுபதேசம் (5—3—89) அன்று நடைபெறும். அன்பர்கள் கலந்துகொண்டு பயன்பெறுவார்களாக.

தருமை ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின்
மார்கழிமாதச் சிறப்பு வழிபாடு

மார்கழி மாதத்தை வழிபாட்டிற்குரிய மாதமாக நம் முன்னோர்கள் கொண்டுள்ளனர். அதனாலேயே முன்னோர்கள சைவ-வைணவத் திருக்கோயில்களில் வைகறைப்போதில் திருப்பள்ளியெழுச்சி வழிபாட்டையும் சிவன் கோயில்களில் திருவாதிரைப் பெருவிழாவையும் திருமால் திருக்கோயில்களின் வைகுண்ட ஏகாதசிப் பெருவிழாவையும் ஏற்படுத்தி வழிபட்டு வருகின்றனர். மார்கழி மாதம் தேவர்களின் விடியற் காலம் என்றும் அவ்விடியற் காலை வேளையில் இறைவழிபாடு செய்து இறையருள் பெறவேண்டும் என்றும் கருதி மார்கழி மாத வழிபாட்டை நம் முன்னோர்கள் மேற்கொண்டுள்ளனர். ''மாதங்களுக்குள் மார்கழி மாதமாக இருக்கிறேன்'' என்று பகவத்கீதையில் கிருஷ்ண பரமாத்மா கூறியிருக்கிறார் என்பது இம்மாதத்திற்கு மேலும் சிறப்புத் தருவதாகும். இம்மாதத்தில் இறைவழிபாட்டை மேற்கொள்வோர். இவ்வாண்டு முழுவதும் செய்யும் செயல்களெல்லாம் நன்மையாகவே முடியும் என்பது நம் முன்னோர்கள் முடிவு. அம்முறையில நம் நாட்டில் திருப்பள்ளியெழுச்சி வழிபாடு எல்லாத் திருக்கோயில்களிலும் சிறப்பாக நிகழ்த்தப் பெறுகிறது.

தருமை ஆதீனத் திருக்கோயில்களிலும் மார்கழி மாத வழிபாடு சிறப்பாக நிகழ்த்தப் பெறுகிறது. தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குத் திருபள்ளியெழுச்சி வழிபாட்டை விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நாள்தோறும் சிறப்புற நிகழ்த்தியருளுகின்றார்கள்.

பின்னர் ஸ்ரீ ஞானபுரீசுவரர், ஸ்ரீ தருமபுரீசுவரர், ஸ்ரீ அஷ்டாதசபுஜ ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காபபிகை திருக்கோயில்களில் வழிபாடு நிகழ்த்தி ஆதீனத் திருக்கோயில்களுக்கும் பிற திருக்கோயில்களுக்கும் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்கு அருட்பிரசாதம வழங்கி ஆசியருள்கின்றார்கள். ஆங்காங்கும் உள்ள மக்கள் பலருக்கும் இறைவழிபாட்டு முறையை உணர்த்தவும், அவர்களை இறைவழிபாட்டில் ஈடுபடுத்திப் பயன்பெறச் செய்யவும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பல தலங்களுக்கும் எழுந்தருளி வழிபாடாற்றியருளுகிறார்கள். மேலும் ஆதீனத் திருக்கோயில்களுக்கு எழுந்தருளுமபோது ஆதீன உயர் அலுவலர்களையும்

உடனழைத்துச்சென்று ஆதீனத் திருக்கோயில்களின் நிர்வாகத்தை மேற்பார்வையிடச் செய்து நெறிப்படுத்தியருள்வதும் குறிப்பிடத் தக்கது.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நாள்தோறும் எழுந்தருளி நிகழ்த்தும் இச்சிறப்பு வழிபாட்டின் போது உலக நலங்கருதி சுவாமிக்கும், அம்பாளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் அருச்சனையும் நிகழ்த்துவித்து வழிபாடாற்றுகிறார்கள்.

சோழநாட்டைச் சிவாலயமாகக்கொண்டு வழிபடும் முறையில் மத்தியார்ச்சுனம் என வழங்கும் திருவிடைமருதூர்த் திருக்கோயிலை சிவத்தலமாகவும். சூழவுள்ள திருவலஞ்சுழியை விநாயகர் தலமாக வும், சுவாமிமலையை முருகன் தலமாகவும், திருவாவடுதுறையை நந்தி தலமாகவும், திருஆலங்குடியைத் தட்சிணாமூர்த்தி தலமாக, வும், சிதம்பரத்தை நடராஜப் பெருமானுக்குரிய தலமாகவும் சீகாழியைப் பைரவர் தலமாகவும், திரு ஆப்பாடியைச் சண்டேசுவரர் தலமாகவும் சூரியனார்கோயிலை நவக்கிரகத் தலமாகவும் கொண்டு விளங்கும் தலங்களையும் வழிபட்டருளினார்கள்.

வழிபாடாற்றிய தலங்கள் :

16—12—88 மார்கழி முதல் நாள் வெள்ளிக்கிழமை மயிலாடுதுறை ஸ்ரீ மயூரநாத சுவாமி திருக்கோயில், 17—12—88 சனிக்கிழமை தருமபுரம் ஸ்ரீ தருமபுரீசுவரர் திருக்கோயில் 18—12—88ஞாயிற்றுக்கிழமை கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீசத்தி புரீசுவரர் திருக்கோயில், மணக்குடி ஸ்ரீ சுந்தரேசுவரசுவாமி திருக் கோயில், 19—12—88 திங்கட்கிழமை திருவிழந்தூர் ஸ்ரீ பரிமள ரங்கநாதசுவாமி திருக்கோயில், மயிலாடுதுறை ஸ்ரீகாசி விசுவநாத சுவாமி திருக்கோயில், 20—12—88 செவ்வாய்க்கிழமை வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயில், 21—12—88 புதன்கிழமை பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி திருக்கோயில், கழனிவாசல் ஸ்ரீ சித்தி விநாயகர் திருக்கோயில், 22—12—88 வியாழக்கிழமை வள்ளலார் கோயில் ஸ்ரீ வதான்யேசுவரசுவாமி திருக்கோயில், 23—12—88 வெள்ளிக்கிழமை திருக்குறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவர சுவாமி திருக்கோயில், திருக்கருப்பறியலூர் (தலைஞாயிறு) ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவரசுவாமி திருக்கோயில், 24—12—88 சனிக்கிழமை சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயில், (ஆருத்ரா தரிசனம்) 25—12—88 ஞாயிற்றுக்கிழமை திருத்துருத்தி(குத்தாலம்) ஸ்ரீ உக்தவேதீசுவரர் திருக்கோயில், 26—12—88 திங்கட்கிழமை

ஆலங்குடி காசியாரண்யேசுவரசுவாமி திருக்கோயில், திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயில், 27—12—88 செவ்வாய்க்கிழமை வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயில், திருப்புன்கூர்த் திருக்கோயில், 28—12—88 புதன்கிழமை விளநகர் ஸ்ரீ துறைகாட்டும் வள்ளலார் திருக்கோயில், 29—12—88 வியாழக்கிழமை சித்தர்காடு ஸ்ரீ சிற்றம்பலநாடிகள் திருக்கோயில் 30—12—88 வெள்ளிக்கிழமை சீகாழி ஸ்ரீ பிரமபுரீசுவரசுவாமி திருக்கோயில், திருமுல்லைவாயில் திருமுல்லைவனநாதர் திருக்கோயில் 31—12—88 சனிக்கிழமை திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவர சுவாமி திருக்கோயில் 1—1—89 ஞாயிற்றுக்கிழமை கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி திருக்கோயில், 8—1—89 ஞாயிற்றுக்கிழமை திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி திருக்கோயில், 9—1—89 திங்கட்கிழமை மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரசுவாமி திருக்கோயில், 10—1—89 செவ்வாய்க்கிழமை பரசலூர் ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி திருக்கோயில், 11—1—89 புதன்கிழமை மயிலாடுதுறை ஸ்ரீ சித்தி விநாயகர் திருக்கோயில், 12—1—89 வியாழக்கிழமை திருக்குவளை தியாகராஜ சுவாமி திருக்கோயில், 13—1—89 வெள்ளிக்கிழமை திருப்பனந்தாள் ஸ்ரீ செஞ்சடையப்பர் திருக்கோயில், 14—1—89 சனிக்கிழமை மயிலாடுதுறை மாயூரநாதசுவாமி திருக்கோயில், ஆகிய திருத்தலங்களில் சிறப்பு வழிபாடு ஆற்றினர்கள்.

வேளூரில் தைச் செவ்வாய்த் திருவிழா

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான வைத்தீசுவரன்கோயில் என வழங்கும் புள்ளிருக்கு வேளூரில் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கு 29—1—89 முதல் 7—2—89 வரை தைச்செவ்வாய்த் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை, மாலை இருவேளைகளிலும் விசேஷ, அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. 6—2—89 திங்களன்று திருத்தேர் உலாவும் 7—2—89 செவ்வாயன்று சித்தாமிர்த தீர்த்தத்தில் கடைச்செவ்வாய்த் தீர்த்த விழாவும், நடைபெற்றன. திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், கந்தர் கலிவெண்பா, முத்துக்குமாரசுவாமிகள் பிள்ளைத்தமிழ், கந்தரலங்காரம், கந்தர் அநுபூதி, திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ், திருஇலஞ்சி முருகன் பிள்ளைத்தமிழ் ஆகிய திருநூல்கள் பற்றித்தக்க புலவர்களைக் கொண்டு நாள்தோறும் மாலையில் சொற்பொழிவுகள் நிகழ்த்துவிக்கப் பெற்றன. திருமுறைப் பாராயணம் நடைபெற்றது. அன்பர்கள் சுவாமி தரிசனம் செய்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயனுற்றனர்.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்

(விபவஹு மாசிமீ 1உ முதல் 30உ முடிய)

(12—2—89 முதல் 13—3—89 முடிய)

விபவஹு மாசிமீ 1உ பானுவாரம் பரணி நக்ஷத்திரம் கரசை கரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 23 நாழிகை 26 விஞடிக்கு மிதுனலக்கினத்தில் ஸ்ரீ உலக ரட்சகரான சூரியபகவான் மகரராசியினின்று கும்பராசியில் சங்கிர மணமாக மாசி மாதப் பிரவேசம் செய்தருளுகின்ருர். அன்று விஷ்ணுபதி புண்ணிய காலம். சங்கிரமண காலகிரகஸ்திதியின் பலஞவது உலகப் பிரஜை களுக்கு சுபிட்சம் ஏற்படும், மக்கள் உணவு, உடை, இருப்பிட சௌகரியம் பெற்று ஜீவனேபாயத் தொழில்களில் உயர்வுற்றுப் பொருளாதாரம் அடையப்பெற்று நல்வாழ்க்கையில் திகழ்வர். தேசங்களில் ஆன்ருேர்களின் சமுதாய சேவை அறப்பணிகள் செவ்வையாக நடந்துவரும். ஈஸ்வரகிருபையில் நாடுகளில் பிரஜா பிரதிநிதிகள் ஆளுநர்கள் அரசர்கள் செங்கோல் ஆட்சியில் நீதி பரிபாலனம் ஏற்படும். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் பரமநிஷ்களங்க தோற்றமுள்ள பரமாசாரிய சுவாமி களாக வந்து ஈஸ்வர தியானத்தில் மிளிர்கின்ற சிவஞான குரு மகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் ஜெகத் குருமகான்கள் உலகத்துக்கு நீதி, தாமகர்மம், புண்யகர்மம், தெய்வபக்தி ஆகிய செவ்வியவழி தம் திருவாய் மலர்ந்து அருளி பிரஜ க்ஷேமத்துக்கு ஆசியருள்வார்கள். சிஷ்யகோடிகள் ஸ்ரீமத் தம்பிரான் சுவாமிகள் ஆகியவர்களுக்கு ஞானதீக்ஷை செய்து ஆசி அருள்வார்கள். மக்கள் குருபக்தி தெய்வபக்தியில் மனேலயமாக நற்கிரியைகள் புரிந்து சீரிய வாழ்க்கை நடத்துவர். தேசங்களில் எங்கும் தேவாலயங் களில் நியமமாகப் பூஜைகள் நடைபெற்று உலகம் சுபிட்சமுறும்.

சந்திர கிரஹணம்

குறிப்பு :- விபவஹு மாசிமீ 9உ (20—2—89) சோமவாரம் அன்று பௌர்ணமி மகநக்ஷத்திரத்தில் கேதுகிரஸ்தம் தூம்ரவர்ணம் சந்திரகிரஹணம் பிடிக்கும். அது சொருபாபராக புண்ணிய காலம் தாதுருபர்வா, இந்தியாவில் தெரியும். இது இந்தியன் ஸ்டாண்டர்டு மணியில் இரவு,

ஸ்பர்ஸம் – நிமீலனம் – மத்தியகாலம் – உன்மீலனம் – மோக்ஷகாலம்
7-13, 8-26, 9-5 9-45, 10-57

காலம்வரையில் ஆகும். பரிமாணம் 1-28. பகல் மணி 10-00க்குமேல் போஜனம் செய்யக் கூடாது. பௌர்ணமி சிரார்த்தம் மறுநாள் செய்யவேணும். ஆயில்யம், மகம், பூரம், அசுவதி,மூலம் நக்ஷத்திரங்களில் பிறந்தவர்கள் சாந்தி செய்து கொள்ள வேணும்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபபலனை நடக்கும். பணவருமானம் வந்து நிறையும். பொன்மணிபூஷணம் அளிக்கும். வித்துவத்துவம், கலைத்துறையில் தொழில் உத்தியோகம்ஆகியவற்றில் நன்னிலையை ஏற்படுத்திவரும். மார்ச்சு 2 தேதி ஆனால் நான்கு வகை ஆதாயம் தரும். எல்லாக்காரியங்களும் வாக்குறுதியுடன் செம்மையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும். தெய்வ ஸ்தலம் செல்லுதல் ஆசாராதி நல வழிபேணுதல் ஆகும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும் பிப்ரவரி 28, மார்ச்சு 1 இத்தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பணவருமானம் பெருமதிப்பில் வரும். வித்துவத்துவம், கலைத்துறையில் உத்தியோகத்தில் செல்வாக்களிக்கும். மார்ச்சு முதலில் எழுத்து மூல விஷயங்களில் நல்லன ஏற்பட்டு வரும். ஆபரணம் வாங்குதல் வாகன பிராப்தி, வெளியூர்ப் பயணம் ஏற்படுதல் ஆகும். புத்திரர், பௌத்திரர்களுக்கு சுபம் தரும். தாம்பத்திய வாழ்க்கை சுமுகமாக நடக்கும். மார்ச்சு 2, 3, தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பணவருமானம் வந்துகொண்டிருக்கும். அதற்கேற்பச் செலவினங்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். வித்துவத்துவம், கலைத்துறையில் பிப்ரவரிக்குள் அரிய வாய்ப்புக்கள் ஏற்படச் செய்யும். வீடுவாகன சௌகரியம் மேலாக இருந்துவரும். புத்திரர், பௌத்திரர்களின் கல்வி, கலை, தொழில் ஆகியவற்றில் முன்னேற்ற ஸ்திதியாகும். எல்லாக்காரியங்களும் ஈஸ்வர சித்தத்தில் உறுதிப் பாடாக நடந்து வரும் மார்ச்சு 4,5 தேதிகள் சந்திராஷ்டமம் புதன், வியாழன் சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணவருமானம் பெருமதிப்பில் வந்து கொண்டிருக்கும், வித்துவத்துவம், கலைத்துறையில் பிரபலஸ்திதியாகும். நாற்கால் ஜீவ பிராப்தியில்

சர்ப்பதோஷம் காணும். இயந்திர சாதனங்களில் நல்லன ஏற்படும். பூமியில் செந்நெல் பிராப்தியில் நற்பலன் வரும். எல்லாக் காரியங்களும் தெய்வபலனில் சித்தியாக நடக்கும். தார புத்திரர்களின் நலம்நன்ருக இருந்துவரும். மார்ச்சு 6,7 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமானம் கௌரவத்திற்கு ஏற்ப வந்து சேரும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் விசேஷ பலனையளிக்கும். ஓர்ஆபரண பிராப்தியளிக்கும். முக்கிய காரியங்களில் இருந்த தடங்கல்கள் நீங்குவதாகும். வாகன சுகம் திருப்தியளிக்கும். புத்திரர்களின் கல்வி, தொழில் துறைகளில் முன்னேற்றம் தரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். மார்ச்சு 8, 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் மதிப்பாக வந்து கொண்டிருக்கும். வித்துவத்துவம், கலைத்துறையில் மேலிடத்திய நன்மதிப்பு, பிரசித்தம் ஏற்படுதல் ஆகும். பூமியில் இயந்திரங்களில் நற்பலன் தரும். எழுத்து மூல விஷயங்களில் மார்ச்சு முதலில் அரசாங்க நன்மை ஏற்பட்டு வரும். புத்திரர்களின் கல்வி கலை உத்தியோகத்தில் உயர் ஸ்திதியாகும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். பிப்ரவரி 12 மார்ச்சு 10, 11, 12 தேதிகளில் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்,

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலா ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் நன்மதிப்புத் தரும். பணலேவாதேவிகளில் பத்திர லிகிதங்களில் நற்பல பிராப்தியளிக்கும். நவீன வாகனம் வாங்குதல் ஆகும். எல்லாக்காரியங்களும் ஜெய பிராப்தியாக நடந்து வரும். ஓர்பொது நிர்வாகம் ஏற்கும். பூமி பிராப்தியில் நற்பலன்வரச் செய்யும். பிப்ரவரி 13, 14, 15 மார்ச்சு 13 இத்தேதிகள் சந்த்ராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங் ளும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமானம் மதிப்பாக வரும். நல்ல ஆபரணம் தரும் வித்தியா வியாபாரதிகளில் கலைத்துறையில் உத்தியோகம் ஆகியவற்றில் மார்ச்சு முதலில் அரசாங்க நன்மையை ஏற்படுத்தும். இயந்திர

வாகனம் தரும். எல்லாக்காரியங்களும் இஷ்டசித்தியாக நடந்து வரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். தெய்வ பக்தியில் தான தர்மங்கள் செய்யும். பிப்ரவரி 16, 17 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

9 தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் வரும். இரத்தினபூஷணம் தரும். வித்துவத்துவம், கலைத்துறையில் அரசாங்கப்புகழ்ச்சி தரும். பிப்ரவரி 26 தேதி ஆனால் முயற்சித்த காரியங்களில் வெற்றியை ஏற்படுத்தும். மன அமைதி ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். பிப்ரவரி 18,19 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகர ராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். பண வருமானங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தும். அளவுக்கு மேல் செலவினங்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். புத்திரர் அல்லது புத்திரிக்கு சுபகாரிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும். பெரியோர் தக்கோர்களின் உதவிகள் ஏற்பட்டு மகிழ்ச்சி நிலவும். எல்லா நெருக்கடி சம்பவங்களையும் சமாளிக்க தெய்வபலன் இருந்துவரும். பிப்ரவரி 26 தேதிக்குமேல் மனஸ்தாபத்தில் விலகி இருந்த பெரியோர் அல்லது தொடர்புடைய ஒருவர் ஒன்றுகூடுவர். பிப்ரவரி 20, 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்ப ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பணவருமானம் கணிசமாக வரும். சுப நிகழ்ச்சிகளில் வைராக்கியப் போக்கில் செலவும் ஏற்கும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் விளம்பரம் ஆகியவற்றில் முதலீடு ஆகும். வீடுவாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் இருந்து வரும். எல்லாக்காரியங்களும் இஷ்டசித்தியில் நடந்து கொண்டிருக்கும். அரசாங்கத்தில் சீர் தூக்கப்படுதல் ஆகும். பிப்ரவரி 23,24 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் கெடியான தோரணைக்கு ஏற்ப வரும். வித்துவத்துவம் கலைத்துறையில் சிறப்புத்தரும். எல்லாவகையிலும் இலாப பிராப்தி ஒருபுறம் இருப்பினும் மார்ச்சு மாதம் தவிர்க்க இயலாத சில அவசிய செலவினங்களை ஏற்கும். நல்ல திடசித்தம் அளிக்கும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். பிப்ரவரி 25, 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபம்.

GNANASAMBANDAM MAGAZINE

Statement about the ownership and other Particulars of the magazine

Form IV

1.	Place of publication	-	Dharmapuram
2.	Periodicity of its Publication	-	Monthly
3.	Printer's and Publisher's Name	-	V. Ramaiah Pillai
	Nationality	-	Indian
	Address	-	West Street, Dharmapuram, Mayiladuthurai - 609 001.
4.	Editor's Name	-	Vidwan Srimath Ramaling a ThambiranSwamigal
	Nationality	-	Indian
	Address	-	Velur Devasthanam, Vaithiswarankoil - 609 117.
5.	Names & addresses of Individuals who own the Newspaper, and Partners or shareholders holding more than one percent of the total Capital		**His Holiness Sri-La-Sri Shanmuga Desika Gnana Sambanda Paramacharya Swamigal Avl** Dharmapuram Adhinam Dharmapuram Mayiladuthurai - 609 001, Tamil Nadu.

I. V. Ramaiah Pillai hereby declare that the particulars given above are true to the best of my knowledge & belief.

(S-d) V. RAMAIAH PILLAI,
Publisher.

Date 10—2—1989.

அனைத்துலக சைவசித்தாந்த
ஆராய்ச்சி நிறுவனம்
இதழ்வழிச் சைவ சமயக்கல்வி-V
பாடம் - 1.

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிகரின் திருவருட்பாத் திரட்டுச் சிந்தனை :

ஸ்ரீ காசி விசுவநாதர் திருஅருட்பா

டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன், எம். ஏ., பி. எட்., பிஎச். டி.,

தருமை ஆதீனத்தின் பத்தாவது குருமகாசந்நிதானமாக விளங்கியருளியவர்கள் ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக சுவாமிகள் ஆவார்கள். இவர்கள் அருளாட்சிக் காலம் தருமையாதீன வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. இவர்கள் பல அருளற்புதங்கள் நிகழ்த்தி அருளியவர்கள். குறிப்பாக மூன்று நிகழ்ச்சிகளை எண்ணலாம்.

மூன்று அற்புதங்கள் :

(1) தருமையில் ஒருநாள் இரவு விண்வழிச் சென்ற சித்தர் ஒருவரின் செலவு தடைப்பட்டது. அச்சித்தரின் நிழல் இவர்கள் திருமுன்னிலையில் தெரிந்தது. இவர்கள் அந்நிழலை நோக்கி வா எனச் சுட்டுவிரலால் அசைத்தார்கள். சித்தரும் கீழேஇறங்கிவந்து குருநாதரை வணங்கித் தருமையிலேயே தங்கினார். தருமை ஆதீனத்தில் சித்தர் வந்திறங்கிய இடம் இன்றும் சித்தர்க்கட்டு என்று வழங்கப் பெறுகிறது.

(2) சேதிமாநகரத்தில் வாழ்ந்த வேளாளர் ஒருவர், தம் மகளுக்குச் சிவதீட்சை செய்வித்தருள வேண்டி, குருமூர்த்திகளிடம் விண்ணப்பம் செய்துகொண்டார். இவர்களும் அவ்வண்ணமே தீட்சை செய்வித்தருளினார்கள். இவர்களின் அருளால் அந் நங்கைக்கு ஞானம் முதிர்ந்தவுடன் வயதும் முதிர்ந்து மூதாட்டியாகக் காட்சி தந்தார். குருவருளை வியந்து சொக்கநாதனை வழிபட்டுத் தருமையிலேயே தங்கித் திருத்தொண்டாற்றி வீடு பேறு எய்தினார்.

(3) இவர்கள் தலயாத்திரை சென்ற போது, மலை நாட்டு அரசன் துங்கன் என்பான் கண்டு வணங்கினன். அவனுடைய ஒரே மகளைப் பிரமராட்சசம் பற்றியிருந்தது. எச்செயற்பாட்டினாலும் தீராத அது, இவர்கள் அளித்த திருநீற்றால் விலகியது. இதனால் மலையரசன் மகிழ்ச்சியுற்று நிலங்கள் பலவும் ஆதீனத்திற்குக் கொடுத்தான். குருநாதர் தருமை திரும்பி, ஒருநாள் உலா வந்த போது, அந்த பிரமராட்சசம் இவர்களை வணங்கி நின்றது. "யாதுவேண்டும் உனக்கு" என்று இவர்கள்கேட்டார்கள். "இவ்வுரு நீங்கி நற்கதி அடைய அருள வேண்டும்" என்று பணிந்து வேண்டியது. குருநாதர் இரக்கம் கொண்டு தாம் செய்து வரும் அனுட்டானங்களில் ஒரு கால அனுட்டானத்தை அதற்குத் தத்தம் செய்தார்கள். அது உடனே தன் உரு நீங்கித் தேவ உருப்பெற்று விண்ணுலகம் சென்றது. இதனால் இன்றும் ஆதீனத்தலைவர்கள் ஒரு கால சந்தியா வந்தனத்தைக் கூடுதலாகச் செய்துவரும் வழக்கம் கொண்டுள்ளார்கள்.

திருப்பனந்தாளில் திருமடம் நிறுவ ஆணை அருளியது :

குமரகுருபரசுவாமிகளால் காசியில் ஏற்படுத்திய ஸ்ரீ குமாரசாமி மடத்தின் பரம்பரையில் ஆறுவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த தில்லைநாயகத்தம்பிரான் சுவாமிகள் இவர்களின் ஆணையைப் பெற்று, காசிமடத்தின் கிளை நிறுவனமாக கி. பி. 1720ல் திருப்பனந்தாளில் ஒரு மடத்தினை நிறுவியருளினார்கள்.

அருளிய நூல்கள் :

இக்குருநாதர் அருளிய நூல்கள் பதினறு ஆகும், காசி, சிதம்பரம், சீகாழி, திருவாரூர், தருமை ஆகிய தலங்களில் விளங்கும் மூர்த்திகள் மீது பாடப் பெற்ற அருள் நூல்கள் அவை. இவை அனைத்தும் ஒன்று திரட்டப் பெற்று, "சிவஞான தேசிகர் திருவருட்பா" என வழங்கப் பெறுகிறது. அவற்றில் ஸ்ரீ காசி விசுவநாதர் திருஅருட்பா குறித்து ஈண்டுச் சிந்திக்கலாம்.

ஸ்ரீ காசி விசுவநாதர் திருஅருட்பா :

இந்நூலில் 10 பாடல்கள் அமைந்துள்ளன. இவற்றைப்பொருள் வகையில் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம் (1) இறைவனின் திருவுருவச்சிறப்பு (2) காசித்தலத்தின் சிறப்பு (3) கங்கை நதியின் சிறப்பு (4) குருநாதர் வேண்டுகோள். இந்நூலிலுள்ள 10 பாடல்களில் முதல்பாடல் இறைவனின் திருவுருவச்சிறப்பினையும் 5, 6 ஆம் பாடல்கள் காசித்தலத்தின் சிறப்பையும் 8 ஆம் பாடல் கங்கை நதியன்பெருமையினையும் எஞ்சிய 2, 3, 4, 7, 9, 10 ஆம் பாடல்கள் குருநாதரின் வேண்டுகோளையும் வெளிப்படுத்துவன.

1. இறைவனின் திருவுருவச்சிறப்பு :

இறைவனின் திருவுருவத்தினைக் கேசாதி பாதமாக இதில் வருணிக்கிறார். தாமரை முகத்தின் அழகொழுகு கருணையும், நிலா என வரும் சிறுநகையும், கங்கையமர் சடையும் பிறையும், திருநீறு விளங்கும் பவளத்திருமேனியும், சங்கத்தோடு அணிந்தசெவிகளும், தார்மார்பும், முக்கண்ணும், மழுமான் தாங்கிய சிவந்த கைமலர் களும், திருவடிகளாம் தாமரைகளும் கொண்டு ஒப்பற்ற விடை யின்மேல் அடியேன்காணும்படி வருவாயாக என்றுகுருமூர்த்திகள் போற்றுகிறார்கள்.

2. காசித் தலத்தின் சிறப்பு :

காசிமாநகரம் மண்ணில் இலங்குகின்ற புண்ணியத்தலமாகும். இத்தலத்தில் இருந்து இறந்த மனிதர்கள் மட்டுமல்லாமல் பிற உயிரினங்கள் கூட நற்கதி அடையும் என்பது சமய நம்பிக்கை; இதனை இந்நூல் 5 ஆவது பாடலில் கூறுகின்றார்கள். சாரூப பதவி பெற்ற உருத்திரர்கள் விண்ணுலகில் ஒருவரை ஒருவர் சந்திக்கும் பொழுது, முன்பு நான்காசியம்பதியில் உயிர்நீத்தபறவைஎன்பார். பிறிதொருவர் நான் கொசு என்பார்; நான் பன்றி என்பார்; இப்படியாக ஒட்டகம், குதிரை, களிறு, புழு, வாளை, அரவம், மரம், எறும்பு எனக் கூறிக்கொள்வர். இவர்களோடு பேசும்பொழுது, காசியம்பதியில் உயிர்நீத்த மனிதன் நான் என்று கூறி மகிழ்வது எப்பொழுது? என்று குருநாதர் கேட்கிறார்கள்.

பண்டுநான்வாரணா சிப்பதியில்உடல் விட்ட
    பறவை மசகம்கழுகுநான்
பன்றிநான் ஒட்டகங் குதிரைநான் மும்மதம்
    பாயவரு களியானைநான்.
மண்டிடு மலத்தில் புழுத்த புழு நான் நீரில்
    வாளைநான் வரியரவுநான்
மரம்நான் எறும்புநான் என்றொருவருக்கொருவர்
    மனமகிழ்ந்தே குலாவும்
அண்டர்தொழவே கயிலை அமலநின் வடிவான
    அருளுருத்திர நாயன்மார்
அவர்களுடன்எக்காலும் அடியனேன்மன்னினனென்
    றகமகிழும் நாள் எந்தநாள்?

என்று கேட்கிறார்கள்.

மேலும் 6 ஆவது பாடலில் காசிநகரின் சிறப்பினைக் கூறுகின்றார்கள். உயிர்கள் சாரூப பதவி அடைய வேண்டும் எனில் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் படிமுறைகளைப் பெற வேண்டும் என்று கூறுவர். ஆனால் இப் படிமுறைகளைப் பின் பற்றாமல் அவமே செய்தாலும் அந்த உயிர்கள் வாரணாசியில் உடலைவிடில் இந்த ஒருநன்மையினாலேயே சாரூப முத்தி பெறும். நான்குதடந்தோள், முக்கண், ஒருபாதிஉமை, அரவு, பிறைஅணி சடைமுடி, இந்திரன் முதலிய தேவர்களும் வந்து பணிந்து கேட்ட வரங்களை அருளும் பதம் அனைத்தையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல உறுதியாகப்பெறலாம் என்கின்றார்கள். இத்தகையநிலையினைப் பெறுதலே சாரூப பதம் என்பதும் இதில் உணர்த்தப் பெறுகிறது.

சரியை கிரியா யோக ஞானத்தினன் முத்தி
சாதிக்க நூல்கள் அந்தத்
தவமேதும் இன்றியே அவமேசெய்தாலும் அத்
தமோமய சராசரங்கள்
நரர்பயிலும் வாரணாசியில் உடலம்விடில்இந்த
நன்மை ஒன்றைக் கொண்டுமேல்
நால்தடந்தோளும் த்ரியம்பகமும் ஓரர்த்த
நாரிபாகமும் உரகமார்
கிரணசந்திரசடா மகுடமும் பிரமர்தலை
கிண்கிணிகள் என்றுகட்டிக்
கிரீடகோடிகள் வந்து பணிய இந்த்ராதியோர்
கேட்டவரம் உதவுபதமும்
கரதலாமலகம்எனவே பெறத் தரும் உனது
கருணைதனை என்சொல்லுவேன்.

என்று கூறுகின்றார்கள்.

3. கங்கைநதியின் பெருமை :

நதிகளிலேயே சிறந்ததும் தூய்மைகுறைபாததும் புண்ணியம் பொருந்தியதும் ஆய பெருமை உடையது கங்கை ஆகும். இது பிறவிப் பெரும் பிணிக்கு மருந்து என்றும் திருமால் முதலியோர் சிவபெருமானை ''அரகரா'' எனப் போற்றி இந்நதி போன்ற அற்புதம் வேறில்லை என்றும் இது எங்கள் மல இருளைப் போக்குகின்ற நூறு கோடி சூரியர் என்றும் அசுத்த பிரகிருதி மாயையாம் குற்றங்களைக் கழுவிடும் ஞான ஆனந்த தூயகடல் என்றும் போற்றும்படி மேலான குணங்கள் அமைந்த பரம சிவத்தோடு ஒன்றும் பாகீரதிப் பெயர் கொண்ட இந்த கங்கை நதியை உலகில் அன்னை என வைத்த நின்னுடைய கருணையை எப்படிப் போற்றுவேன் என்கின்றார்கள்.

அங்கண்வானத்தமரர் பிறவிப்பெரும்பிணிக்
கருமருந்தெனவும் அயன்மால்
ஆதியோர் அரகரா இந்த நதி யற்புதம்
அகிலத்துள் இல்லையெனவும்
எங்கள்மல திமிரபடலம் கிழித் தோட்டுதற்
கிரவிசதகோடி யெனவும்
இந்தரசாலப்பகட்டாகும் ப்ரபஞ்சமோ
டிரண்டுவித மாயையென்னும்
பங்கமுற்றும் கழுவ வருஞான ஆனந்த
பரிசுத்த சலதியெனவும்
பரமகல்யாணகுண பரமசிவசத்தியொடு
பாகீரதிப்பெயர் புனை
கங்கைநதியைப் புவியில் அன்னையென வைத்தநின்
கருணை தனை என்சொல் லுவேன்.

என்று பாடுகிறார்கள்.

கங்கைக்குப் பாகீரதி எனப் பெயர் வந்ததற்குக் காரணம் பகீரதன்வேண்ட வந்தது என்பது ஆகும், இதனைத் திருவிளையாடல் புராணம், "அன்று எம்பிரான் ஆணையால் பகீரதன் பொருட்டுச் சென்று நீயொரு தீர்த்தமாய்த் திளைப்பவர் களங்கம் ஒன்று தீவினைத் தொடக்கு அறுத்து ஒழுகு எனப்பணிந்தான்" எனக் கூறுகிறது.

4. குருநாதரின் வேண்டுகோள் :

இறைவன் உயிர்களுக்கு உற்ற துணையாய் இருக்கும் நிலையினை 2 ஆம் பாடலில் விளக்கியருளுகிறார்கள். தாய்தந்தையாயும் தாய்தந்தைக்குத் தாய்தந்தையாயும் பிறவிப் பிணிக்கு உற்ற மருந்தாயும் பிழைகளைப் பொறுக்கும் மன்னனும் தவத்தின் பயனும் இம்மை மறுமை இன்பத்தினை அருளும் வள்ளலாயும் குறைவிலாச் செல்வமாயும் நிறைந்த ஞானகுருவாயும் என் குலதெய்வமாயும் மற்றுள்ள பேருமாயும் சுற்றமாயும் உள்ளவன் நீயே என்று கூறி, அதனால் உன்னை வந்தடைந்தேன்; பரமானந்த அமுதை உன்மலர்க்கரம் கொண்டு ஊட்டி உன்மகவு என வளர்த்திடுவாய்! என வேண்டுகிறார்கள்.

பெற்றதாயும் பிதாவும் பிதாவைப்பெற்ற
பெரியவனும் உரியதாயும்
பிறவிப்பெரும்பிணிக்கொருமருந்தும் பெரிய
பிழைகளெல்லாம் பொறுக்கும்

கொற்றவனும் நற்றவப் பயனும் இகபரமும்
கொடுத்திடும் பெருவள்ளலும்
குறைவற்ற செல்வமும் நிறைவுற்ற மெய்ஞ்ஞான
குருவும் என்குலதெய்வமும்
மற்றுள்ளசித்தியும் சுற்றமும் நீயென்று
வந்தடைந்தேனை அருளான்
மலர்க்கரங்கொண்டுபர மானந்தஅமுதூட்டி
மதலையெனவே வளர்ப்பாய்

என்று வேண்டுகிறார்கள்.

பொன்னாசைக்கும் புவியாசைக்கும் பெண்ணாசைக்கும் என் ஆவியைத் தினமும் இலக்காக வைத்தாய்; ஏழைபங்களான் என்னும் சொல்லுக்கு இயைய எனக்குப் பங்காக நீ இல்லையே; ஒருக்கால் என்னைத் தவிரவோ இவ்வழக்கு; மதுரையில் பன்றியின் குட்டிக்கு முலைதந்த செயல் - முருகனைத் தந்த அருளிப்பாடு இவற்றிற்கு ஏற்ப என்னையும் கனிவித்துக் கருணை செய்ய மாட்டாயா? என்று வேண்டுகிறார்கள்.

பொன்னாசை யென்கிற பேய்க்கும் மயல்செய்கின்ற
புவியாசையாம் புலிக்கும்
பூவையர்கள் ஆசையினில் ஆவியொழியச்செயும்
புலைவேடர் வெங்கணைக்கும்
என்னுவியைத்தினம் இலக்காக வைத்தனையி
தென்னவிளையாட்டையனே
ஏழைபங்காளன்நீ என்றுனைச் சொல்வதிங்
கேழையடி யேன்தவிரவோ
முன்னாளில் ஒருமதுரை நகரினில் பன்றிக்கு
முலைகொடுத்தவன் அல்லவோ
முருகவேளைப் பெற்ற தந்தைஅலவோ பெரிய
மூதுலகில் அடியார்மலக்
கன்னார் உரித் துயிரை வாழையின்கனிசெயும்
கருணைப்ரவாகன் அன்றோ.

என்று போற்றுகிறார்கள்.

இதில் பொன்னாசையைப் பேய் என்றும் புவியாசையைப் புலி என்றும் பூவையர் ஆசையை வேடர் வெங்கணை என்றும் உருவகித்துள்ளமை எண்ணத்தக்கது. புலி துரத்திப் பிடிப்பது; அதிலிருந்து தப்பிக்கலாம்; வேடர் வெங்கணை தள்ளி நின்று செலுத்துவது; இதிலிருந்தும் ஒரு நேரத்தில் விலகி விடலாம். எனவே இவ்விரண்டையும் புவி ஆசைக்கும், பூவையர் ஆசைக்கும் கூறிய

குருநாதர், பொன்னாசைக்குப் பேயை உருவகித்த குறிப்பு, இது பிடித்து விட்டால் எளிதில் விலகாது என்பதால் ஆகும். இன்றும் புவியாசையையும், பூவையர் ஆசையையும் விட்டவர்கள் கூடப் பொன்னாசையை விடத்தயங்குவதைக் காணலாம். இப்பாடலில் பன்றிக்குமுலைதந்தசெயல்-கீழான உயிருக்கு அருளிய குறிப்பையும் முருகனைத் தந்தது மேலான ஒரு பொருளையும் தரவல்ல ஆற்றலைக் குறித்த குறிப்பையும் ஒரு சேரக் குருமூர்த்திகள் எண்ணியுள்ளார் கள் எனலாம்.

என்னுயிர், கூட்டை விடுங்காலம், மணிகன்னிகைக் கரைவந்து சேரவும், நீ விடையின்மேல் வரவும் என்தாய், முத்தபிள்ளை விளையாடி நிற்க, இளையபிள்ளைக்கு அமுதத்தை ஒருகரத்தால் ஊட்டி என்னையும் ஒருபிள்ளையாக ஏற்று ஒரு கரத்தால் தடவி மேலாடை வீசுவதால் எழும் தென்றல் காற்றால் என் களைப்பை மாற்றிடவும் நான் காணுமாறு கண்குளிர நின்கண்ணோட்டத்தை வைத்திடுவாய் என வேண்டுகிறார்கள்.

> கூற்றின் இடர் மாற்றவே அவிமுத்தம் என்றோது
> கோநகரம் வந்தடைந்தேன்
> கூட்டைஉயிர் விடுகாலம் நாட்டுமணிகன்னிகைக்
> குலவுதீரம் சேரவும்
> ஏற்றின்புறத்துன் விடப்புறம் பிரியாத
> இமயாசலம் பயந்த
> என் அன்னை முன்னுதவு பிள்ளை விளையாடவும்
> இளையவனை மடியில்வைத்தே
> ஊற்றெடுக்கும் கருணை முலையமுதம் ஒருகைகொண்
> டூட்டிஎனை ஒருபிள்ளையாய்
> ஒருகரத்தால் தடவி அருள்நயனம்வைத்தெடுத்
> துத்தரியம் வீசுதென்றற்
> காற்றினால்என் களையை மாற்றிடவும் நான்கண்டு
> கண்குளிர நின்கண்வைப்பாய்,

என்று கனிந்து கேட்கிறார்கள்.

இதில், காசியில் இறப்பவர்களுக்கு இறைவன் காட்சி வழங்கவும் தாய் தன் மடியில் கிடத்திக்கொண்டு மேலாடையால் வீசிக் களைப்பைப் போக்குவாள் என்று கூறும் குறிப்பும் விளக்கப் பெறுவதை உணரலாம்.

ஏழாவது பாடலில் குருநாதர் உருக்கமாக வேண்டுகிறார். உடல் இன்னும் எத்தனை நாள் இருக்குமோ என்று ஏங்குகிறது நெஞ்சம் என்றும் நான்படும் துன்பம் உன்னையல்லாமல் யார் அறிவார் என்றும் இன்று வருவாய் நாளை வருவாய் என்று

வழிபார்த்திருக்கிறேன் என்றும் என்னை அஞ்சல் என்று கூறி அடியரோடு கட்டுவித்திடுவாய் என்றும் வேண்டுகிறார்கள்.

ஒன்பதாவது பாடலில் காசியில் நிகழும் ஒரு குறிப்பினைக் கூறுகிறார்கள். மரணகாலம் தனில் மணிகன்னிகைத் துறையில் வெள்ளைவிடையின் மேல் வேலன் உமையவளோடு வந்து என் வலச்செவியில் உபதேசம்வைத்தருள்வாய் என்றுவேண்டுகிறார்கள்.

பத்தாவது பாடல் நிறைவாக விளங்குகிறது. குருமூர்த்திகள் தம் திருவுள்ளத்தில் உள்ள ஏக்கத்தினைத் தொடுத்து அருளுகிறார் கள். என்னுடைய உடலை விடுங்காலம் நான் அறியவும் அப்போது தூய மணிகன்னிகைத் துறைக்கு நான் வரவும் கங்கையில் மூழ்கவும் வெண்ணீறு உடலெலாம் பூசவும் உருத்திராக்கம் பூணவும் தொண்டர்கள் என்னைச் சூழ்ந்து தோத்திரம் சொல்லிக்கொண்டே நிற்கவும் 'ஐ' என்ற கபம் அந்நேரம் மேல் எழாமல் ஐம்பொறி களும் நன்னெறியில் நிற்கவும் நின் திருவடிகளை அடியேன் நினைக்கவும் கைகள் தொழும்படியும் வாய் அஞ்செழுத்து உச்சரிக்கும்படியும் கருணைபுரிவாய் என்று வேண்டுகிறார்கள்.

மெய்யென்று பெயர்பெற்ற பொய்யான என்னுடலம்
விடுகாலம் நானறியவும்
விமலமணிகன்னிகைத் துறைவந்து சேரவும்
மெய்க்கங்கை நதிமூழ்கவும்
துய்யவெண்ணீறங்கம் எங்குமே பூசவும்
சுத்தகண்டிகை பூணவும்
தொண்டு செயும்அடியார்கள்தோத்திரம் சொல்லியே
சூழ்ந்துகொண்டே நிற்கவும்
ஐயந்தநேரத்தில் உந்தாமல்நிற்கவும்
ஐம்பொறிகள்நெறி நிற்கவும்
அறிவுபர மானந்த சின்மயாகாச நின்
அடியிணைகள் சிந்திக்கவும்
கைகள்தொழ வாய் அஞ்செழுத்துச்சரிக்கக்
கடாட்சம் வைத்தருள் ஐயனே.

என்று கல்லும் கரையும்படி வேண்டுகிறார்கள்.

குருமூர்த்திகள் அருளிய 'ஸ்ரீ காசி விசுவநாதர் திருவருட்பா, எனும் இந்நூல், இங்ஙனம் காசி பற்றி அனைத்துக் குறிப்பையும் தந்து மண்ணில் வாழும் உயிர்கள் வேண்டிப் பெற வேண்டிய அருளிப்பாடுகளையும் எடுத்துக் கூறும் உயர்ந்த தோத்திர நூலாக இலங்குகிறது. உருக்கம் நிறைந்த இந்நூலை அன்பர்கள் உணர்வு மிக ஓதி உய்வார்களாக!

உ

குருபாதம்

மாசி மாதச் சிறப்பு நாட்கள்

13—2—89	திங்கள், கிருத்திகை விரதம். வேளூர் கிருத்திகை. தருமை ஸ்ரீ சண்முகருக்கு அபிஷேகம். பீஷ்மாஷ்டமி.
18—2—89	சனி, சனிமஹா பிரதோஷம்.
19—2—89	ஞாயிறு. ஸ்ரீ நடராஜர் அபிஷேகம். மீனுயனம் 57-46. ஆயில்ய விழா.
20—2—89	திங்கள், மாசிமகம். பௌர்ணமி விரதபூஜை, கிருதகம்பளம் சாத்துதல். ஆகாமாவை, திருவையாறு, கும்பகோணம், கஞ்சனூர், காஞ்சிபுரம் முதலிய தலங்களில் மக உற்சவ தீர்த்தம். திருக்கடவூர், திருக்குறுக்கை ஸ்ரீ வீரட்டானேஸ்வரருக்கு அபிஷேகம். திருக்குறுக்கை ஸ்ரீ தோத்ர பூரணம்பிகை சமேத ஸ்ரீ காமதகனமூர்த்தியுடன் ஸ்ரீ பஞ்ச மூர்த்திகளும் புறப்பாடு. திருக்குவளை நெல்மகோற்சவம். இரவு சந்திர கிரஹணம்.
21—2—89	செவ்வாய், பௌர்ணமி, பிரதமை, சிரவண, திதி.
24—2—89	வெள்ளி, சங்கடஹர சதுர்த்தி. தருமை ஆதீனம் 17 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள் குருபூஜை.
28—2—89	செவ்வாய், காளாஷ்டமி.
2—3—89	வியாழன், வேளூரில் மூன்று தினங்களில் சூரிய பூஜை. ஸ்ரீ எறிபத்தநாயனர் குருபூஜை.
3—3—89	வெள்ளி, ஸ்ரீ காரி நாயனர் குருபூஜை.
5—3—89	ஞாயிறு, பிரதோஷம், சிரவண விரதம்.
6—3—89	திங்கள், மஹாசிவன்ராத்திரி மயிலாடுதுறை ஸ்ரீ காசி விஸ்வநாதருக்கு மஹாபிஷேகம். சீகாழியில் மூன்றும் காலத்தில் ஸ்ரீ உமாமஹேஸ்வரருக்கு புழுகாப்பு. திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேஸ்வரசுவாமிக்கு சாயங்காலத்தில் தாழம்பூ மாலை அணிவித்தல்.
7—3—89	செவ்வாய், சர்வ அமாவாசை, துவாபர யுகாதி. ஸ்ரீ கோச்செங்கட்சோழ நாயனர் குருபூஜை.
11—3—89	சனி, சதுர்த்தி விரதம்.
12—3—89	ஞாயிறு, கிருத்திகை விரதம். வேளூர் கிருத்திகை. தருமை ஸ்ரீ சண்முகருக்கு அபிஷேகம்.
13—3—89	திங்கள், சஷ்டி விரதம். வேளூர், திருபுவனம், திருவையாறு முதலிய தலங்களில் பங்குனி உத்திர உற்சவ ஆரம்பம்.

GNANASAMBANDAM Regd. No. TN / M. M. 1
வெளிநாடு Regd. No. TN / M. M. 4

தருமை ஆதீனம்

ஞானசம்பந்தம் பதிப்பகம் வெளியீடுகள்

விலைப் பட்டியல் - 6

1.	திருஅரசிலித் திருப்பதிகம்	1—00
2.	திருஇடைச்சுரத் திருப்பதிகம்	0—80
3.	விளத்தொட்டி தலச்சிறப்பும் தேவாரமும்	1—00
4.	ஸ்ரீ சொக்கநாதசுவாமி திருவருட்பா	1—00
5.	திருச்சிவப்பள்ளி குமரகோயில் தலச்சிறப்பு	1—50
6.	சிவப்பள்ளி, செம்பங்குடி, நாகளேச்சரம், கொண்டல், நெய்தல்வாயில் தலச்சிறப்பு	1—20
7.	தில்லைச்சிவகாமியம்மை இரட்டைமணிமாலை	1—00
8.	ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி திருவருட்பா	1—20
9.	கங்கைகொண்டசோழபுரம் தலச்சிறப்பு	1—75
10.	ஆலய வழிபாடு	0—75
11.	தரங்கம்பாடி திருப்பதிகம்	0—75
12.	பெருஞ்சேரி தலவரலாறு	1—20
13.	திருநாங்கூர்த் தலச்சிறப்பும் தேவாரப் பாடல்களும்	1—20
14.	சைவசமய சாதனங்கள்	0—30
15.	திருத்தொண்டர் திருவந்தாதி	3—00
16.	திருக்கோகரணம் திருப்பதிகம்	1—50
17.	திருக்கழுக்குன்றத் திருப்பதிகம்	1—10
18.	திருநாவலூர் திருவாமூர் திருப்பதிகம்	0—80
19.	திருக்கயிலாயத் திருப்பதிகங்கள்	1—60
20.	சமய இலக்கியம் (தொகுப்புநூல்)	1—75

(அஞ்சல் செலவு தனி)

கிடைக்குமிடம் :— செயலாளர்,
ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமை ஆதீனம்
தருமபுரம் - மயிலாடுதுறை 609 001.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram, at the Gnanasambandam Press. Dharmapuram, Mayiladuthurai 10-2-89.